பிரபவ ௵ 
மலர் 1

176

ஐப்பசி ௴ 
இதழ் 7.

11 JAN

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்திலிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை.

---

THE
**CARDAMOM PLANTER,**
**THE ORGAN**
**of**
**The Travancore Cardamom**
**Planters' Association.**

---

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# ஈழ விவசாயி.

மலர்-1 இதழ்-7

ஐப்பசி- 1927.

JL
J684m211, N27
N27-1-7
159609

# பொருள் அடக்கம்.

| தொடர்ச்சி நிர். | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம். | |
| 2. | இ. எ. வி. சங்கத்தின் ஆறாவது ஆண்டு விழா அக்ராசனப் பிரசங்கம் | 198 |
| 3. | உபசாரப் பத்திரம் | 201 |
| 4. | உபசரணைத் தலைவர் பிரசங்கம் | 204 |
| 5. | நமது ஆறுவது ஆண்டு மகாநாடு | 207 |
| 6. | மைசூரின் முன்னேற்றம் | 215 |
| 7. | நமக்குப் பத்திரிகை அவசியமா? | 222 |
| 8. | உபாசி சங்கம் | 230 |
| 9. | சங்கங்களும் அவற்றின் பயனும் | 241 |
| 10. | எல்ச்செடியின் ஜாதகம் | 256 |
| 11. | இலங்கையில் ஏலக்கிருஷி | 260 |
| 12. | ஓர் நல்லுரை | 262 |
| 13. | ஓர் பிரசங்கச் சுருக்கம் | 263 |

---

## சந்தா விபரம்.

---

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்கு சந்தா | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8—0 |

---

குறிப்பு:—

வியாசம் எழுதுவோர்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பவேண்டும். விஷயங்களுக்கு வியாசதாரர்களே பொறுப்பாளி.

176

# ஏல விவசாயி.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(பாரதியார்)

ர. நாராயணஸ்வாமி, ஆசிரியர்

மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ ௵ ஐப்பசி மீ
1927 ௵ அக்டோபர்-நவம்பர் மீ | இதழ் 7

அத்துவித வத்துவைச் சொற்பரா சத்தியை
யருமறைகண் முரசறையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கலநி ராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பரவெ ளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம்.

159609
சென்னை-600 0

## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின்

# 6-வது ஆண்டு விழா,

போடிநாயக்கனூர்,

௭—10—1927.

போடிநாயக்கனூர் ஜமீன்தார்
மாட்சிமை தங்கிய மகா கனம்

## T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள் அக்கிராசனப் பிரசங்கம்.

ஏலக் கிருஷிக சகோதரர்களே! கனவான்களே!

இவ்வாண்டு நிறைவிழா உற்சவத்திற்கு அக்கிராசனம் வகிக்கும் அரும்பெருமையைத் தாங்கள் எனக்களித்ததற்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தங்களுக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உலக அநுபவமும், துரைத்தனப் பயிற்சியும் நிறைவுற்று, பொதுஜன சேவையைப் பெருமகிழ்ச்சியுடன் செய்து வருபவரும், நமது ஏலத்தோட்டங்கள் அமைந்துள்ள திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவான் பதவியைத் திறமையுடன் வகித்து, ஏல விவசாயிகளாகிய நம்முடைய லாப நஷ்டங்களை நன்குணர்ந்து வழி காட்டக்கூடிய ஸ்ரீமான் திவான்பகதூர் M. கிருஷ்ணன் நாயரவர்களும், மேதாவி என்று பிரசித்தி வாய்ந்து, பல பிரசங்க மேடைகளில் புகழும் கீர்த்தியும்பெற்று, நமது ராஜதானியின் நிர்வாகத்தில் உயர் பதவியுடைந்து, அமது சிறந்த கல்விப்பெருக்கு,



நுட்பமான யுக்திபுத்தி, ஆழ்ந்த அநுபவம் இவைகளைக்கொண்டு நமது முன்னேற்றத்திற்கு சாதகமான துறைகளை உணர்த்த வல்ல ஸ்ரீமான் **Sir C. P.** இராமசுவாமி அய்யர் அவர்களும் சிறப்புடன் வகித்த இப்பதவிக்கு அவர்களிடம் நிறம்பி நிற்கும் யோக்யதைகளில்சிறு பாகமும் வாய்ந்திலாத என்னை, தாங்கள் தெரிந்தெடுத்திருப்பதானது, தாங்கள் என்னிடம் வைத்துள்ள அளவிலா அன்பைக் காட்டுவதின் நிமித்தமென்றே நான் கருதவேண்டியிருக்கிறது. இதற்குமுன் நமக்குக்கிடைத்துவந்த அக்கிராசனர்களுக்கொப்ப இவ்வருஷமும் இப்பதவியை ஏற்க ஒருவர் கிடைக்கும் பாக்யம் இருந்திருந்தால், நானும் தங்களுடன் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பேனென்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனாலும் தாங்கள் அன்பினாலளித்த பதவியை ஆணையாகக்கொண்டும், தங்களுடைய ஒற்றுமைப் பைக்கொண்டும் இம்மகா சபையின் காரியங்களைச் செவ்வனே முடிக்கலாமென்ற துணிவுகொண்டு இப்பதவியை நன்றியுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

கனவான்களே! சுமார் ஆறு வருஷங்களுக்கு முன் நம் ஏல விவசாயிகளின் கஷ்ட நிஷ்டூரங்கள் எத்தகைய ஆனவை என்பதை உணராதவர் நம்முள் யாருமில்லை. சரக்கின் விலைவாசிக் குறைவு, ஏலப்பயிர்த்தொழில் அபிவிருத்திக்குப்போதுமான திரவிய வசதியின்மை, வியாபாரிகளின் சூழ்ச்சி, குடியானவர்களின் வறுமை முதலிய காரணங்களால் இப்பெரிய தொழிலுக்கு ஹானி ஏற்படும் நிலைமை சம்பவித்த காலத்தில் வறுமையின் கொடுமையால் ஏல விவசாயிகளுக்குள் ஒருவித ஒற்றுமை உணர்ச்சி எழுந்து, இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதன்பின் மேற்கண்ட ஒற்றுமைக் குறைவின்றி விற்பனை முறைகளையமைத்து, தேவையான காலங்களில் திரவிய சகாயம் செய்ய நாணயச்சங்கங்களும் ஏற்படுத்தி, ஏலவிவசாயிகளின் காரியங்களை நடத்திவருவதின் நற்பயன் என்னவென்பதை நாமெல்லோரும் நன்குணர்ந்திருக்கிறோம். அப்படியிருந்தும் இப்பொழுது தங்கள் முன், படிக்கப்பட்ட உபசாரணைப்

பத்திரத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் ஒற்றுமைக் குறைவைக் காட்டக்கூடிய ஒழுங்கீனங்களும், அதன் பயனாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களும் மிக்க விசனிக்கத்தக்கவையே. பொதுநலம் மறந்து, தன்னலம் நாடி, பிறர் வாழ்வையும் தாழ்வையும் சிறிதும் கருதாது, செல்வத்தையடையச் சுருக்கு வழி தேடி, அதனால் பலருக்கிழைக்கும் தீங்கையும் மதியாது நிற்பார் சிலர். வறுமையின் சிரமத்தால் வரம்புகள் கடந்து, காலக்ஷேபம் செய்யக்கருதுவார் வேறு சிலர். பொறுப்பும், பெருந்தன்மையும் சிறிதுமின்றி தற்பெருமைகொண்டு, விதண்டாவாதம் செய்து, வேறுபாடுகள் உண்டாக்கி, அதன் பயனாக, அநேக ஏழை விவசாயிகளுக்கு அளவிலா நஷ்டத்தை இழைப்பதின் பெரும் பாவம் தங்களைச் சார்ந்ததென்பதைச் சிறிதும் சிந்திக்காமல், தாங்கள் கொண்டதே கொள்கையாக கடைப்பிடித்து, பலர் சாபத்திற்கு ஆளாகியும் நிற்பார் மற்றொரு பகுதியர். தாமும் கெட்டு, பிறரையும் கெடுத்து, அகம்பாவம் நிறைந்து நிற்கும் இவ்வகை மதியீனர்களை என்னென்று கூறுவோம். ஆயினும், பெரிய காரியங்களைக் கைக்கொண்டு நடத்தும் எந்தச் சங்கத்திலும் இவ்வித மேற்படுவது சகஜமென்பதைக்கொண்டும், அவ்வித நிகழ்ச்சியின் காரணத்தை ஆராய்ந்து சீர்படுத்த தாமே வல்லவர்களென்ற நம்பிக்கையைக்கொண்டும், தம்மனந்தளரவிடாமல் முன்னிலும் அதிகமான ஊக்கங்காட்டி வேலை நடத்த வழிதேடுவதே சிறந்த நிர்வாகிகளின் பான்மை.

சென்ற வருஷத்தில் ஏலச்சரக்குச் சரியான விலையில்லாமலும், அப்படிப்பட்ட குறைந்த விலைக்கும் சரக்குகள் விடுபடாமலுமிருந்ததின் நிமித்தம் ஏலக்குடிகளுக்கு மிகுந்த சிரமமேற்பட்டது. தற்கால சாந்தியாக, கோவாபரேடிவ் பாங்கு மூலம் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அந்த முறைகள் பூரா சௌகரியத்தைக் கொடுக்கவில்லையென்பதும், எக்காலத்திலும் அவ்விதம் செய்து கொண்டிருக்கமுடியாதென்பதும் அனுபவத்தில் நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொண்ட விஷயம். இனியிரு



ந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்களை நன்குணர்ந்து, இனி அவ்விதம் சிரமம் ஏற்படாவண்ணம் நமது காரிய திட்டத்தை ஏற்படுத்தவேண்டியதவசியம்.

இதுவரை நாம் உள்நாட்டுக் கிராக்கியை நம்பியே வியாபார முறைகளையமைத்து வந்திருக்கிறோம். ஆனால், நமது சரக்கோ அந்நியநாட்டுக் கிராக்கியைப் பொறுத்ததென்பது நமக்குத் தெரிந்த விஷயம். இனி நாம் பம்பாய் வியாபாரிகளைமட்டும் நம்பி இருத்தல் போதாதென்பதும் தெளிவாகிவிட்டது. ஆகையால் ஏல விவசாயிகளாகிய நாம் ஷை கிருஷி விஷயத்தில் சிரத்தையும் ஊக்கமும் காட்டுவதுடன், உற்பத்திசெய்த சரக்குச் சரியான விலைக்கு விற்பனையாகும் மார்க்கம் தேடவேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதுமான காரியம். இவ்விஷயத்தில் இங்கு வந்திருக்கும் ஏல விவசாயிகள் நன்றாய் பரிசீலனைசெய்து திருப்திகரமான ஏற்பாடு செய்வீர்களென்று நம்புகிறேன்.

எல்லாம் வல்ல இறைவனருளாலும், தங்களுடைய ஒற்றுமைப்பினாலும் இவ்வாறுமாண்டு நிறைவிழா இனிது நடைபெறுவதுடன் எவ்வித குறையுமின்றி இச்சங்கம் நாளுக்குநாள் அதிக பலமடைந்து ஏலவிவசாயிகளனைவரும் ஏற்றமாய் வாழ்ந்து நாடும், நாமும் சுகம் பெறும் வண்ணம் ஈசன் நமக்கு அருள்புரிவாராக!

---

## உபசாரப் பத்திரம்.

போடிநாயக்கனூர் ஜமீன்தார்
மாட்சிமை சான்ற உயர்திருவாளர்

## தி. வி. க. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள் சமுகத்திற்கு,

புண்ணியமிக்க பூபதியவர்களே!

எல்லாம் வல்ல இறையோன் கருணையால், பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் அன்பும் அருளும் இன்பும் இறைமையும்

படைத்துள்ள தாங்கள் மலர்தலையுலகில் வான்சுடர்போல இலங்கி எஞ்ஞான்றும் அமைதியாய் வாழ்க!

தங்களை நிலை பெறு தலைவராக்கொண்டு நிறுவப்பெற்று நின்று நிலவுறும் திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம் என்னும் இத் திருத்தகு நிலயத்தின் ஆறாண்டு நிறைவிழா இனிது நிகழும் பொருட்டு, இத்தருணம் எங்களிடை அவைத்தலைமை வகிப்பதற்குத் தங்களையே தெரிந்தெடுக்குந் தனியுரிமை கிடைத்துளதால், தாமரை மாமகள் மருவு சந்நிதியீர், தங்களை எல்லையற்ற பேருவகை அடைந்து வரவேற்கின்றோம். தங்கள் வரவு சால்புடைத்தாக!

கொழுங்குடிச் செல்வக் குலப்பூபதியாகிய தாங்கள், நமது பகுதியின் நன்மக்களுடைய பொது வாழ்வு செழித்துப் புனிதமுற்று, எல்லாத்துறையிலும் ஈடேற்றமெய்தப் பலதிறப்பட்ட நல்நெறிகளிலே, ஈடுபட்டுதவியாற்றும் அருட்டிறம் பெரிதும் புகழ்ந்து பேணற்பாலதே. இன்னோரன்ன ஏதுக்களிலே, இன்றியமையாச்சிறப்பிற்றாகிய கல்விப்பயிற்சி கதிக்கும் வண்ணம் இளைஞருக்காக அமைக்கப்பெற்று நமது வளம்பதியிலே நன்றாய் நடைபெறும் உயர்தரப் பாடசாலைக்கு உயிர் நிலைபோலத் தாங்கள் இந்நாள்காறும் இயற்றிவந்துள்ள அறச்செயல் யாவும் அருமைபயினவையே. அவை, மென்மேலும் பெருகி நன்மை நல்குக!

இனி, இந்நாட்டு ஏலவேளாண்மைத் தொழின் முறையும், ஏலச்சரக்கு விற்பனையும் தொடக்கத்திலே பொதுவாக நமது தலைமைச் சங்கத்தின் ஆதரவிலும், அதன் உட்படையாகக் கம்பம், கோம்பை, தேவாரம் முதலிய ஊர்களிலுள்ள கிளைச் சங்கங்களின் சார்பிலும் நடைபெற்று வந்தன. பின்னர், இத்திறப் பயிர்த்தொழில் முட்டுப்பாடின்றி முன்னேறுவதற்கு விவசாயிகளுக்கு அவசியமாகிய பொருளுதவி வசதியைக்கருதி யாங்காங்கு, தனித்தனியாகச் சகாயக் கூட்டுறவு நிதிகளும் இணைத்து நிறுவப்பெற்றன. ஆனால் அவைகள் உள்நாட்டு நிலவரத்திற்கேற்ற



இயல்பு பெறுமையால், இடையூறு அடிக்கடி ஏற்படலாயிற்று. அது காரணமாய் ஒருவிதமான வேற்றுமை யுணர்ச்சி மேலிட்டதாலே, கிளைச் சங்கங்களிலே உளைச்சலுக்கிடமாய் உட்பிரிவும் பிளவும் உண்டாகிவிட்டன. அந்த அளவிலே ஒற்றுமை குலைந்து அரும்பொருளாகிய ஏலச்சரக்கும் முறை கேடான குறை விலைக்கு வந்தது. அதனால் விளைந்த ஏதமும் சேதமும் யாவரும் தெளிவாய் அறிந்தவையாகும்; அம்மட்டில் ஒழிந்ததோ! ஒழிந்தபாடில்லை. சங்கத்தின் கண்ணியமே தாழ்வடையும்படி திருட்டு விற்பனையும் புரட்டும் தொடங்கின. அதன்மேல் இவற்றின் அனுபவப்பயனாய் தற்காலம் நம்மிடைத் தலைப்பட்டிருக்கும் விற்பனைக் குழாத்தின் மேதக்க முயற்சியால், ஒரு சிறிது நமக்குள் ஒற்றுமைதோன்றி, நிலவரமும் பழைய நிலைக்கு வந்துள்ளது.

ஆதலால், இனிமேலும் இன்னல் விளையாமல், ஒற்றுமையொன்றே பற்றுக்கோடென எண்ணித்துணிந்து, எல்லோரும் அதிலே கண்ணுங்கருத்துமாய்க் கட்டுப்பட்டு, உலைவில்லாமல் உய்யும் வகையை ஊக்கமாகவும் உறுதியாகவும் உணர்த்தி வற்புறுத்தி உருப்படச்செய்வது தங்கள் பொறுப்பெனச் சாற்றவும் வேண்டுமோ? சீர்திருத்துவது தேவரீர் தங்கள் தலைக்கடன் என்பதைத் துலக்கமாய்ப்பற்றி, உண்மையை அதன்கண் உள்ளுறப் பதித்துக் காரியத்திற் கடைத்தேற்றும்படி மிகவும் வணக்கமாய் வேண்டிக்கொள்கிறோம்.

இப்பால் வதியும் எம்மனோர்க்கெல்லாம், தாயகமாகிய தங்கட்கு, நாளும், எல்லாவெற்றியும் வல்லோன் அருளுக.

இங்ஙனம்,

போடிநாயக்கனூர்,
7—10—1927.

தங்களிடத்து அன்பும் பணிவுமிக்க,
திருவாங்கூர் ஏல விவசாய சங்கத்தார்.

## திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம்

# ஆறாவது ஆண்டு நிறைவிழா.

## உபசரணைச் சபைத்தலைவர் மகா-ா-ா-ஸ்ரீ மகா கனம் வ. குலசேகர பாண்டிய நாயக்கரவர்களின் பிரசங்கம்.

**கனவான்களே!**

முற்றுமுணர்ந்த முழுமுதற்பொருளாம் கருணையங்கடலின் அருளை முன்னிட்டு, இற்றை ஞான்று, திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்து ஆறாண்டு நிறைவிழாவுக்கு உங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எமது விருப்பத்திற்கேற்ப அன்புடைமையோடு ஈங்குப்போந்துள்ள நீங்கள் எல்லோருமே, மற்ற தருணங்களில் இம்மூதூர்க்குவரினும், உங்களை உவப்புடன் வரவேற்று உபசரித்து முகமன்கூறி விருந்து புரந்தால் எமது முறையாகலின், இத்தகைய திருப்பணியைச் சிறப்பிக்கும்பொருட்டு எமது அழைப்புக்கிணங்கி எம்மிடைத் தோன்றிய காலை, யாங்கள் வரம்பில்லாத மகிழ்ச்சியோடு உங்களை இருகரமேந்தி எதிர்தழுவியேற்று அளவளாவுதல் எங்கள் இரட்டைக்கடமையாம். ஆகலின் இப்போது, பொதுவாக இவ்வூர்ப் பொதுஜனச் சார்பிலும், சிறப்பாக என் குலசேகரச் சார்பிலும் இவ்விருதிறமும் செவ்விதிற் பொருந்திய சங்கத்தின் சார்பிலும் உங்கட்கு மிகவும் வாஞ்சையோடு நல்வரவு கூறுகிறேன். ஏல விவசாயிகளல்லாத ஏனைய உயர்வுடையாளரும் நயகுணத்தோடு எம்பாற்போந்து ஆதரம் பெருகச் சங்கத்தின் மாண்புதழைக்கச் செய்வதால் அன்னோருக்கும் இத்திறப்பட்ட உரிமையே காட்டி அருமை பாராட்டுகிறேன்!



இதற்கு முந்திய ஐந்தாண்டுகளிலும் இச்சங்கத்தின் ஆண்டு விழாக்களை இடுக்கணின்றி இனிதுமுடித்தருளிய எம்பிரான்றானே இந்த நன்னாளிலும் அவ்வாறே இதனைச் செவ்வையாய் நிகழ்த்தி எல்லா நலனும் அருள்வானாக.

நமது தலைமைச் சங்கத்தின் நிலைபெற்ற தலைவரையே நிகழும் ஆண்டு விழாவிற்கும் அக்கிராசனராய்த் தெரிந்தெடுக்கலாயிற்று. அன்னவரும் தமது நன்னய உணர்ச்சியால், தலைமை வீற்றிருக்கச் சம்மதமளித்தனர். இது மிகுந்த அநுகூலமென்றே எண்ண வேண்டும். ஏனென்றால் நமது சங்கமும் அதனைச்சார்ந்த கிளைகளும், இடையிலே ஒருவாறு இடர்ப்பட்டுச் சிறிது அதிர்ச்சியுற்று மீண்டும் அமைதியை நாடுகின்ற இவ்வேளையிலே உள்நாட்டு இயல்பினை உள்ளபடி உணர்ந்து, உறுதி கடைப்பிடித்து, உசிதமான நடபடிக்கைகளை நடத்தி, நெறி கெடாது சிக்கறுத்து, நம்மைச் சீர்திருத்துவதற்கு, நடுநாயகமாய் நம்மிடைவாழும் பெருந்தகைப் பூபதியே பொருந்தியவரென்க. இனி நாளாவட்டத்தில் நாம் எல்லோரும் ஒருமித்துச் செய்வதற்கு உரியனவாகிய சீரிய நலந்தருங்காரியங்களின் குறைகுணங்களைக் குறித்துச் சங்கத்தில் அவ்வப்போது ஆராய்ந்துள்ளதால் அவைகளைப்பற்றி இந்நிலையிலே நான் எடுத்துரைக்கற்பாலது அதிகமில்லை. ஏற்ற காரியங்களை எண்ணித்துணிந்து செய்யுங் காலத்திற்செய்து முடித்துச் சித்தியடைவதே தெள்ளியோர் இயல்பு. ஆகலால், நடப்பிலே இதுவரை நாலாவழியிலும் தீர்மானித்தவற்றைத் திறப்படுத்தியபின் மற்றைய பிறவும் உற்றுநோக்குவோம்.

தற்காலத்தும், அவைக்கண் அமர்ந்து அரிய செய்திகளைச் சீர்தூக்கப்புகும் திருவாளர் பலரும் அவரவருடைய அறிவிற் கெட்டிய அபிப்பிராயங்களை எல்லோருக்கும் புலப்படுத்தி, அவற்றிற் பொருத்தமானவைகளை, ஒருமுகமாகப்புரிய வேண்டுகிறேன். இனிமேலும் முன்போல் இருக்கலாகாது. துணிந்த பொருட்களைச் சொல்லளவில் விட்டுப் பயன் பெறாதிருப்பது பாங்கில்லை கண்டீர்.

அதனால், பழைய வேலைகளிலே பாக்கியில்லாமையும், நிகழ் காலப்பணிகளில் நிச்சய புத்தியும் காட்டிவீர்களென்ற நம்பிக்கையோடு, ஒரே ஒரு கருமம் உணர்ந்த முற்படுகிறேன். அதாவது இப்போது நமது சங்கத்தின் விளம்பரக் கருவியாய் மேவியிருக்கின்ற "ஏலவிவசாயி" என்ற பத்திரிகையை நிலைபெறுத்தி முறைப்படி நேர்மையாய் நடத்தி அதன் வாயிலாக அடையக்கூடிய பற்பல நலன்களைப் பயன்படுத்தலோடு, ஜெர்மனி, பிரான்ஸ், நார்வே, ஸ்விட்ஸர்லாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளிலே, நமது ஏலச் சரக்கைக்கொண்டு அருவிலைப் பொருள்களை அனேகம் செய்கின்ற வர்த்தக சங்கத்தார்களிடம் நமது சங்கம் நேர்முகமாக எழுத்துப் போக்குவரத்து வைத்துக்கொள்வதற்கு, இது முதலாக ஏற்பாடு செய்வது அத்தியாவசியமாக வேண்டற்பாலதாகும். அவ்வாறு, வெளிநாட்டு நிலவரந்தெரிந்து இடைவழித் தரகர்களின் சூழ்ச்சிகளுக்கு இடமின்றித் திட்டமான செட்டுச்செய்தால், நாம இதுகாறும் அடைந்துவரும் சிறிய ஊதியம்போலாது, நமது உழைப்புக்குத்தகுந்த ஊதியம் பெறலாம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. மேனாட்டு வர்த்தக முறையிலே நெடுநாட்பழகி நிலைமைதெரிந்து குறிப்பாய் இதனை வரையறுத்துக்கூறுகிற ஒருமானிய நண்பரின் வாக்குறுதி தழுவியே யானும் இவ்விடத்தில் இதைக் குறிப்பிடுகிறேன். ஏற்றுக்கொண்டு கையாளுமிடத்து ஏற்றம் உண்டென்பதே எனது துணிபு.

மேற் போந்தவையும் பிறவுமாகிய எந்தத்தொழிலையும் எந்தத் துறையிலும் ஆற்றலோடுசெய்து ஈடேற வேண்டினால், இவை எவற்றிற்கும் இன்றியமையாத விழுப்பொருளான முழுப்பொருளொன்றை நாம் எப்போதும் விடாமற் கைப்பற்றவேண்டும். அப்பொருள் யாதெனில் அதுதான் உலையா ஒற்றுமை! ஒற்றுமை! ஒற்றுமை! என்று உலகெல்லாம் போற்றும் உயர்ந்த மெய்ப்பொருளாம். சீர்த்தியும், கீர்த்தியும் சேர்த்து வைத்துள்ள சேமநிதி வைப்புக்குத் திறவுகோல் இதுவே.

அன்பார்ந்த கனவான்களே!

இதுவரை மிகவும் பொறுமையோடிருந்து என் சொற்களைச் செவியேற்றுக்கொண்ட உங்களெல்லோர்க்கும் என் உண்மையான வந்தனம்.



# நமது ஆருவது ஆண்டு மகாநாடு.

கோம்பையிலே கூடவேண்டிய இம்மகாநாட்டைக் காலதேச வர்த்தமானங்களைக் கவனித்துத் தலைமைச்சங்க நிர்வாகிகள் போடிநாயக்கனூரில் நடத்தவேண்டுமென வேண்ட, கோம்பைக்காரர்களும் சங்கத்தின் தற்கால நிலைமையைக்கண்டு, விஷயத்தைவிட்டுக்கொடுத்துப் போடிநாயக்கனூரில் ஆருவது ஆண்டு விழாவை நடத்தச் சர்வ சம்மதம் கொடுத்துவிட்டார்கள். அதற்கேற்றாற்போல போடிநாயக்கனூர் வாசிகளும் அதனை ஏற்றுக்கொண்டார்கள். போடிநாயக்கனூரில் உபசாரணைச் சபைக் கூட்டப்பட்டது. அதில் சின்ன ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ கனம் குலசேகரப் பாண்டியரவர்கள் தலைவராகவும், ஜனாப் உசேன்கான் ராவுத்தரவர்கள் ஸ்ரீமான் C. S. குருஸ்வாமி செட்டியாரவர்கள் காரியதரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இம்மகாநாட்டிற்குக் குமாரமங்கலம் ஜமீன்தாரரும், சென்னை அரசாங்கத்தின் முதல் மந்திரியுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ கனம் டாக்டர் சுப்பராயன், M. A., LL. D. T. C. D., B. C. L., அவர்களை அக்ராசனம் வகிக்குமாறு வேண்ட அவரும் அன்புடன் அவ்வாறே அனுமதி அளித்தார். பின்பு, இம்மாதத்தில் இத்தேதியில் இங்குவர இயலாதென கனம் மந்திரி அவர்களால் அறிவிக்கப்பட்டது.

நமது சங்கத்தின் நிகழ்கால நிலைமையை நினைத்தும், நமது சங்கத்தை ஸ்தாபித்தவர்களில் முதன்மை பெற்றவரும், நமது சங்கத்திற்கு சாஸ்வத அக்கிராசனரும், போடிநாயக்கனூர் ஜமீன்——ரும் ஆகிய மாட்சிமைவாய்ந்த மகா கனம் T. V. K. காமய

ராஜ பாண்டியவர்களைக் கௌரவப்படுத்தி, ஏல விவசாயிகள் சந்தோஷமடையுமாறும் உபசாரணைச் சபையார்கள் ஷை மகா கனம் தங்கிய அக்ராசனர் அவர்களையே அக்ர ஆசனத்தில் அமருமாறு அதிக ஆவலுடன், அன்புடன் அழைக்க, அவரும் அவ்வாறு செய்ய இசைந்தார். மகாநாடு 7௳ யென வெளியிடப்பட்டது.

அக்டோபர்மீ 7௳யில் போடிநாயக்கனூரில் 6-வது ஆண்டு விழாக்கூட்டம் கூடியது. முன் மாதிரியாகப் பிரதிநிதிகள் அயலூர்களிலிருந்து அதிகமாக வரவில்லை. கனம் போஷகாவர்கள் வரவில்லை. காரணத்தைக்கண்டுகொள்ள முடியவில்லை. முடிவில் சபை நிறைந்திருந்தது. கடவுள் வாழ்த்துப் பாடியபின் ம. க. அக்ராசனர் அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் ஸ்ரீமான் V. காமராஜ் அவர்களால் படித்துக்கொடுக்கப்பட்டது. சின்ன ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ கனம் குலசேகரப் பாண்டிய நாயக்கரவர்களின் உபசாரணைப் பிரசங்கம் ஷை சபைக் காரியதரிசி ஜனாப் உசேன்கான் ராவுத்தரவர்களால் சபை முன் வாசிக்கப்பட்டது. சட்டசபை மெம்பர்களில் சிலர், மைசூர் கனம் திவான் அவர்கள், மைசூர் கனம் முதன்மைக் காரியதரிசி அவர்கள், இன்னும் அநேக அறிஞர்கள், பெரியோர்கள் இடமிருந்து வந்த ஆசித் தந்திகள், கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

வரவேற்புச் சொற்பொழிவு மிக்க சுருக்கமாக விருந்தபோதிலும், அதிகமான அர்த்த புஷ்டியுடன் விளங்குகிறது. ஒற்றுமை ஒற்றுமை ஒற்றுமை யென்று மூன்று முறை எழுதப்பட்டு, ஒற்றுமையின் வன்மையை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ரத்ன சுருக்கமான பிரசங்கத்தில் இவர் ஏல விவசாயிப் பத்திரிகையை மறந்து விடாது, அதை அதிகமாக ஆதரிக்கவேண்டுமென விரும்புகிறார்; வேண்டுகிறார். இவருக்கிருக்கும் பத்திரிகாபிமானத்தை எவ்வாறு சொல்வது! இவரது பத்திரிகாபிமானத்தை உச்சிமேற்கொண்டு, இவரை வாயார வாழ்த்துகின்றேன்; மனதாரப் போற்றுகின்றேன். பத்திரிகை அபிமானிகள் இவர்



போன்று வருக்கு ஒருவரேனும் இருப்பரேல், நமது நாடும், பாஷைகளும் சுமார் 10 ஆண்டுகளில் அதிவேகத்துடன் அபிவிருத்தியாகி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகள் போன்று விளங்கும். கௌரவம் வாய்ந்த ஏல விவசாயத் தலைவர்களும், கனம் மெம்பர்களும் ஏல விவசாயிப் பத்திரிகையை வளர்க்கட்டும்; அக்கடமை அவர்களுடையது. ஆதிகாலத்தில் அயல் நாட்டாரால் தான் அதிகமாய் ஏலம் வாங்கப்பட்டது. அதனை அனுசரித்தே கனம் வரவேற்புத் தலைவரவர்கள் நாம் ஏலத்தை அயல் நாடுகளில் விற்க ஏற்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமெனப் பொன்னுரைகள் மொழிந்திருக்கிறது இங்கு குறிப்பிடத்தக்கது; அவசியமாக அனைவரும் அதிசீக்கிரத்தில் அனுஷ்டிக்கத்தக்கது. புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோம்பைக் கம்பெனியின் ஞாபகம் எல்லா விவசாயிகளுக்கும் இப்பொழுதுவரும். பிரசங்கத்தின் பாஷையின் நடை உயர்தரமே. தமிழபிமானிகள் இதன் அருமை பெருமைகளை அறிந்து ஆனந்திப்பார்களாக.

மாட்சிமை வாய்ந்த உயர் திருவாளர் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கரவர்களுடைய அக்ராசனப் பிரசங்கமானது மகா கனம் உபசாரணைத் தலைவரவர்களுடைய சொற்பொழிவுக்குத் தக்க பதிலாக அமைந்திருக்கிறது. ஒற்றுமைக் குறைவால் ஏல விவசாயிகளுக்குக் கஷ்ட நஷ்டங்கள் வந்திருக்கின்றனவென்று வருந்துகிறார். கலகக்காரர்களையும், ஒற்றுமையைக் கெடுப்பவர்களையும், தற்பெருமைக்காரர்களையும், வீண் விதண்டா வாதிகளையும், தான்தோன்றிகளையும் தயை, தாட்சண்யமின்றித் தக்கபடி கண்டிக்கிறார். ஏழை விவசாயிகளுக்காக இரங்குகிறார். புதிய புதிய சட்டங்களையும், திட்டங்களையும் ஏற்படுத்திக் காரியங்களைச் செய்யுமாறு எல்லா விவசாயிகளையும் உற்சாகிக்கிறார். சங்கத்தின் தற்கால சில கேடுகளை நீக்க வழிதேடவேண்டுமென வற்புறுத்துகிறார். அயல் நாடுகளில் ஏலத்தை விற்க ஏற்ற எத்தனங்களை நாமே செய்யவேண்டுமென யோசனை கூறுகிறார். ஏலக்கிருஷி விஷயத்திலும், ஏல விற்பனை விஷயத்திலும் ஊக்கங்கொண்டு

நூதன வழிகள் தேடவேண்டுமென்று அபிப்பிராயங்களைக் கூறி மொழிகள் புகலுகிறார். அக்ராசனப் பிரசங்கம் மிக்க சுருக்கமாயிருப்பினும், அநேக அரிய, பெரிய விஷயங்களை அடக்கிக்கொண்டிருக்கிறது. பிரசங்கம் பூராவும் சுருக்கமே. அநேக ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டு விளங்குகிறது. வாசகங்கள் தோறும் உள்ளுணர்ச்சிகள் பிரகாசிக்கின்றன. உண்மையின் மணம் கமழுகின்றது. சுருங்கச் சொல்லி ஒவ்வொன்றையும் விளங்கவைத்திருக்கிறார். இத்தகைய பிரசங்கமே இச்சமயத்தில் நமக்குத் தேவை, தேவையென்று சொல்லத்தேவையில்லை. தலைமைச் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் சொர்ணப்பன் செட்டியாரவர்களால் தலைமைச் சங்கத்தின் ஆண்டு அறிக்கை எழுதி வாசிக்கப்பட்டது. அச்சிட்ட அறிக்கைப் புஸ்தகங்கள் வழக்கம்போல் வழங்கவில்லை.

கம்பம் கனம் பீர் முகம்மதுப் பாவலரவர்கள் ஒற்றுமையைப் பற்றிப் பிரசங்கம் செய்தது ரஞ்சிதமாகவேயிருந்தது. அவர் பற்பல மேற்கோள்களை எடுத்துச்சொன்னார். அவருடைய எடுத்துக்காட்டுகள் சிலாகிக்கத்தக்கன. அவர் இப்பாகங்களுக்குப் புதியவரல்ல. அவரைத் தமிழ் நாடு நன்கு அறியுமாகையால், அவரைப்பற்றி அதிகமாக எழுதவேண்டியது அவசியமில்லை.

மைசூர் சமஸ்தானத்து காடூர்ஜில்லா பொருளாதார சூப்பிரண்டு ஸ்ரீமான் B. S. சூரியநாராயணய்ய அவர்கள் கன்னடத்தையும் இங்கிலீஷையும் அடிக்கடி கலந்து கலந்து தமிழில் சற்று பேசியது சபையோர்களுக்குச் சந்தோஷகரமாயும், புன்சிரிப்புத் தருவதாயுமிருந்தது.

கோம்பை மகா-ா-ா-ஸ்ரீ கனம் திருமலைசுப்பு செட்டியாரவர்களின் கன்னிகா பரமேஸ்வரி இலவசப்பாடசாலை மாணவர்களால் ஆதிகாலத்து ஏலக்காய் விற்பனையைப்பற்றி ஹாஸ்யமாக ஒரு சம்பாஷணை நடத்திக்காட்டப்பட்டது. இது பாலியர்களால் நடத்திக்காட்டப்பட்டபோதிலும், ஏல விவசாயிகள் உணரத்தக்க



தாயுமிருந்தது. இது ஒரு சிறந்த படிப்பினையோடு மனதிற்கு ஒரு நல்விருந்தாயுமிருந்தது. இச்சிறுவர்கள் சபையை அடிக்கடி கொல்லெனச் சிரிக்கும்படி செய்து கொண்டிருந்தார்கள். சில ஜமீன்தார்களும், பல பெரிய மனிதர்களும் வந்திருந்தார்கள். வந்தனங்களுடன் விழாக்கூட்டம் கலைந்தது. பின்பு சங்கீதக் கச்சேரி ஆரம்பமாயிற்று.

மறு நாள் 8௳ காலையில் சங்கத்தின் நடபடிக்கைகளுக்காக ஏல விவசாயிகள் கூடினார்கள். விஷயாலோசனைக் கூட்டத்திற்காக அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் வெளியே போனபின்பு அங்கத்தினர்களுக்காகத் தேவாரம் ஸ்ரீமான் ஹரிகோவிந்தம் பிள்ளையவர்களால் ஒரு பிரசங்கம் இனிமையாக நடத்தப்பட்டது. மறுபடியும் மாலையில் 5 மணிக்குக் கூடினார்கள். தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. முடிவடையாமல் கூட்டம் மறுநாள் காலை 9 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டு இரவு 9 மணிக்குச் சபை கலைந்தது

மறு நாள் 9௳ யன்றுகாலையில் கூட்டம் கூடினார்கள். அநேக தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன. புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மைசூரில், சக்லாஸ்பூரிலிருந்து நான்கு பெரிய ஏலத்தோட்டக் கனவான்களும், காடூர் ஜில்லா பொருளாதார சூப்பிரண்டு ஸ்ரீமான் B S. சூர்யநாராயணையா அவர்களும், கைத்தொழில் இலாகா சூப்பிரண்டு ஸ்ரீமான் ராம அய்யங்காரவர்களும் 7௳யிலேயே கூட்டத்திற்கு வந்துவிட்டார்கள். 8௳ காலையில் மைசூர் கைத்தொழில் இலாகா கனம் டைரெக்டரவர்கள் வந்தார்கள். 9௳ காலையில் கனம் டைரெக்டரவர்கள் சற்று நேரம் பேசினார்கள். அவருடைய பிரசங்கம் அதிமுக்கியமானபடியால் இப்பத்திரிகையில் மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறது. இவர்கள் வரவேற்புச் சபையாரின் அழைப்புக்கிணங்கி, நமது மகா நாட்டிற்கு வந்து, கூட்டம் முடியும் பரியந்தம் விஷயங்களைக் கவனித்துக்கொண்டு, உடனிருந்து நம்

மை கண்ணியப்படுத்தியது நம் சங்கத்திற்கு மிக, மிக கௌரவமே. கோவை T. C. P. A. C. விற்பனைக் கம்பெனியார் தங்கள் பிரதிநிதிகளை மைசூர் ராஜ்யத்திற்கு அனுப்பியதன் மூலமாகத் தான் நமக்கும் மைசூருக்கும் [illegible] ஏற்பட்டிருக்கிறது. அதுவும் அங்கு சென்ற [illegible] விவசாயிகளின் [illegible] தான் [illegible] கனம் [illegible] சிலருக்கு அழைப்புகள் அ[illegible] களும் அவசியம் வரும்படி அதிக [illegible] மைசூர் சமஸ்தானத்து ஏல விவசாயிகளை [illegible] இலாகா உயர்தர உத்தியோகஸ்தர்களையும் திருவாங்கூர் ஏலக் குடிகளையும் நம்மை இணைத்ததற்காக கோவை T. C. P. A. C. விற்பனைக் கம்பெனிக்காரர்கள் நன்கு [illegible] இன்னும் அவர்களுக்கு நாம் என்[illegible] கம்பெனியின் வேலைகள் ஏலவிவசாயிகளின் [illegible] திறக்கும்படி செய்து, ஆழ்ந்து ஆலோசிக்கச் செய்து கொண்டிருக்கின்றன. வந்திருந்த மைசூர் உத்தியோகஸ்தர்களும், ஏல விவசாய கனவான்களும் திருவாங்கூர் சமஸ்தானத்தின் பெயராலும், திருவாங்கூர் ஏல விவசாயிகள் பெயராலும், நமது சங்கத்தின் பெயராலும் வந்தனமளிக்கப்படுவார்களாக. மைசூர் மஹாராஜா மாட்சிமை வாய்ந்த சர் கிருஷ்ண ராஜ உடையாரவர்களுக்கு நமது நன்றியை எழுத்து மூலமாய் நம் சங்கத்தின் மகா நாட்டில் தங்கிய அக்ராசன[illegible] அனுப்ப வேண்டுமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இது செய்யத்தவறமாட்டார்களென்று உறுதியுடன் நம்பிக்கொண்டிருக்கிறேன். இதன் மூலம் மைசூர் சமஸ்தானத்திற்கும் நம் சங்கத்திற்கும் அதிக பரஸ்பரம் ஏற்படுமென்று சொல்லத் தேவையேயில்லை.

நாம் திருவாங்கூர் சமஸ்தானத்துக் குடிகளாயிருந்தும், நாம் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் என்று ஒரு பெரிய பெய



ரை வைத்து, சங்கத்தை நன்கு நடத்திக்கொண்டிருந்தும், திருவாங்கூர் சமஸ்தானத்து இலாகாக்களின் தலைமை உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அழைப்புகள் அனுப்பியிருந்தும், ஒன்றிற்கேனும் தந்தி மூலமாக இல்லாவிட்டாலும், குறைந்தது எழுத்தின் மூலமாகக்கூட ஆசிகள் அனுப்பவில்லை. விவசாயம், கைத்தொழில் இலாகா கனம் டைரக்டர்கள் கூட மௌனமாக இருந்துவிட்டார்கள். ஐயோ! இது யாருக்குக் கேவலம்? நமக்கா, அவர்களுக்கா? தாங்களே யோசித்துக்கொள்ளுங்கள். நாம் புரூக் பாண்ட் கம்பெனிக்காரர்களல்ல. இவர்களின் மௌனமும், ஆதரவும் மைசூர் சமஸ்தானத்தின் மகிமையை அதிகப்படுத்துகின்றது. இந்த சமஸ்தானத்திலிருந்து நாம் என்ன எதிர்பார்க்கலாம்? இங்கு எதற்கும் சிரமப்படவேண்டியது தான்!

நமது சங்கம் சட்டசபையிலும், ஸ்ரீ மூலம் பிரஜா சபையிலும் பிரதிநிதித்துவம் அடையும் பரியந்தம் நமக்குத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் செல்வாக்கில்லை. இதற்காக நமது மேன்மை தங்கிய தலைவர்கள் வேண்டுவன செய்வார்களாக.

எல்லா விஷயங்களும் முற்றுப்பெற்றவுடன் மாட்சிமை தங்கிய பிரசிடெண்டு அவர்கள் சங்கத்தின் நன்மையைக் கருதி எல்லா ஏல விவசாயிகளும் ஒற்றுமையாயிருக்கவேண்டுமென உபதேசம் செய்து, கூட்டத்தைச் சந்தோஷகரமாய் முடித்தார்கள். கூட்டம் எவ்வாறு முடியப்போகிறதோவென்று ஏங்கியிருந்த ஏல விவசாயிகள் ஆச்சர்யமும், ஆனந்தமுமடையும்படியாக மகா நாட்டைச் செவ்வனே நடத்தி, இனிது முடித்த மாட்சிமை வாய்ந்த அக்ராசனர் காமராஜ பாண்டிய நாயக்கரவர்களுக்கும் மைசூர் சமஸ்தானத்து கௌரவமிக்க பிரதி நிதிகளுக்கும் வரவேற்புக் காரியதரிசி ஜனாப் உசேன்கான் ராவுத்தரவர்களால் வந்தனமளிக்கப்பட்டு, மகாநாடு சம்பூரணமடைந்தது.

சாப்பாட்டு வசதிகள் யாவும் சரியாகவேயிருந்தன. முஸ்லிம் கனவான்களுக்கென்று தனிச் சாப்பாடு பிரத்தியேக கவனத்

28

துடன் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தங்குமிடத்திற்காக V. M. ஹைஸ்கூல் கொடுக்கப்பட்டிருந்தது. போடிநாயக்கனூரிலுள்ள அநேக வாலிபர்களும், அந்தஸ்து வாய்ந்த பெரியவர்களில் சில கனவான்களும் இடுப்பில் வேஷ்டிகளைக்கட்டிக்கொண்டு, ஓடோடி, உபசரித்ததைப் பிரதிநிதிகள் ஒருக்காலும் மறக்கவேமாட்டார்கள். முக்கியமாக அந்த அன்பர்களுக்கும் பொதுவாக உபசாரணைச் சபையார்களுக்கும் அயலூர் பிரதிநிதிகள் அதிகமாக நன்றிபாராட்டவேண்டிய தவசியம். அன்றியும் வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். Scouts என்ற வாலிபச்சாரணர்கள் இம் மகாநாட்டில் சந்தோஷ மனத்துடன், மலர்ந்த முகத்துடன் தொண்டாற்ற முன் வந்தது அயலூர் வாசிகளுக்கு அதிக அனுகூலமாகவேயிருந்தது; அவர்கள் ஊழியத்தை இங்குக் குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

குறிப்பு:—

கோம்பை நகர் வாசிகளால் அழைக்கப்பட்ட இம் மகாநாடானது இவ்வருடத்தில் போடிநாயக்கனூரில் ஏன் கூடியதென்று பலருக்கும் தெரியாது. உபசாரணைச் சபைக்கு வந்தனமளித்துவிட்டு மேடையிலிருந்து, கீழே வந்தபின்புதான் சங்கதிகளை அறிந்துகொண்டேன். "கோம்பை, தேவாரம், கம்பம் முதலிய கிளைச்சங்கங்கள் இம் மகாநாட்டை நடத்த முன் வராதிருக்கும் பொழுது, போடிநாயக்கனூர் கிளைச்சங்கம் முன் வந்தது போற்றத்தக்கதே" என்று நான் கூறியது விஷயங்களை அறியாமையில் தான்.

ஆசிரியர்.

---



# மைசூரின் முன்னேற்றம்.

“இந்தியாவில் மைசூர் சமஸ்தானம் மிகச் சிறந்து விளங்குகிறது. பிரிட்டிஷாரால் அரசாக்ஷி செய்யப்படும் மாகாணங்கள் கூட அதைப்போல் செழிப்பாயும் மேன்மையாயும் அரசாக்ஷி செலுத்தப்படவில்லை.” என ஸர் ஸிட்னிலோ எழுதியுள்ளார். பிரகிருதத்தில் அரசாக்ஷி செலுத்தும் மஹாராஜாவின் நாளில்ஷை சமஸ்தானமானது நூதனமாக முன்னேற்றமடைந்து வருகிறதெனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் மைசூர் மஹா ராஜாவான ஸர் ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர உடையார் பகதூர் ஷை சமஸ்தானத்திற்கு அநேக நன்மைகளை இயற்றியிருக்கிறார். சமீபத்தில் வெள்ளி ஜுப்லியும் ஆங்கு கொண்டாடப்பெற்றது. அப்போது ஜனங்கள் காட்டிய உணர்ச்சியிலிருந்தே ஷை மஹாராஜாவிற்குத் தன் ஜனங்களிடை எவ்வளவு புகழ் இருக்கிறதென்பது நன்கு விளங்குகிறது.

## நிபுண ராஜரீகம்.

ஷையார் அவரது 15-வது வயதிலேயே கவர்ன்மெண்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்தது. அதாவது 1902-ம் ஆண்டு ஆகஸ்டுமீ ௮-ந்தேதி. அக்காலத்திலேயே அவருக்கு சமஸ்தான விஷயத்தில் சிரத்தை உண்டாய்விட்டது. இவரது சிரத்தையைக்குறித்து அப்போது ராஜப் பிரதிநிதியாயிருந்த லார்ட் கர்ஸனும் புகழ்ந்து கூறியுள்ளார். மஹாராஜா, தான்பொறுப்பை எடுத்துக்கொண்ட நாள் முதல் மிகவும் உயர்ந்தவர்களான திவான்களால் உதவி செய்யப்பட்டு முன்னேற்றத்திற்கேதுவான பல காரியங்களைச் செய்திருக்கிறார். இவர் பொது நன்மைக்காக ஜனங்களுடன் சேர்ந்துழைப்பவர்.

1902-ம் ஆண்டிலிருந்து சமஸ்தானத்தின் வருமானமும் இரட்டிப்பாய்க்கொண்டு வந்திருக்கிறது. அநேகம் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பண்படுத்தப்பட்டு, கிருஷிகர்களுக்கும் பல சௌகரியங்களேற்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசன வேலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. புதிய ரஸ்தாக்களும் ஏற்படுத்தப்பட்டு ரெயில்வேக்களும் புதிதாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. பரந்த வழியில் கல்வியும் விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஜனங்களுக்கு க்ஷேமகரமான எவ்வழியிலும் மைசூர் சிறந்து விளங்குகிறது.

## சிறந்த திவான்கள்.

ஆனால் இவ்வளவு முன்னேற்றம் சாமர்த்திய முள்ளவர்களின் உதவியின்றி நடத்தியிருக்கமுடியாது. மந்திரிகள், இன்னும் மற்ற முக்கிய ஆபீஸர்கள் தேர்ந்தெடுப்பதில் அவர் அதிஷ்டமுள்ளவர். இம்மந்திரிகளெல்லாம் ஸ்வய நலம் சிறிதும் கருதாது ராஜபக்தியுடன் சமஸ்தானத்திற்கு மிகவும் உழைத்திருக்கிறார்கள். பல பாகங்களிலிருந்தும் திவான் பதவிக்கு எதிர்ப்பு வந்து கொண்டிருந்தபொழுது, மஹாராஜா ராஜீய சாமர்த்தியத்தால ஸர். எம் விசுவேசுவரையாவைத் தேர்ந்தெடுத்தார். அச்சமயம் மஹாராஜா செய்தது நியாயமன்றென பலருக்குத் தோன்றினும், அதுதான் இப்போது சாசுவதமான பலனைக்கொடுத்து வருகிறது. ஸர். எம். விசுவேசுவரையாவின் காலத்தில்தான் அநேக ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இப்போது அமின்—உல்—முல்க் மர்ஸா மஹமத் இஸ்மைல் C. I. E., M. B. E., திவானாக இருந்து வருகிறார். இவர் பிறப்பினால் மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர். இவர் அந்த உத்தியோகத்தை ஓர் தொண்டாகப்பாவிப்பதாக முன்னோர் முறை கூறினார். இவருக்கு உதவியாக மூன்று சிறந்த எக்ஸிகியூடிவ் கௌன்ஸிலர்களிருக்கிறார்கள்.



ஸ்ரீமான் கே. சாண்டி (2) திவான் பகதூர் எம். என். கிருஷ்ணராவ். (3) ஸ்ரீமான் ஸி. எஸ். பாலசுந்தரம் அய்யர். இக்காரணங்களையொட்டி மைசூர் இவ்வளவு முன்னேற்றமடைந்திருப்பது ஆச்சரியமில்லை.

## இயற்கை யழகு.

இந்த சமஸ்தானத்தில் இயற்கை அழகும் நிறைந்திலங்குகிறது. மேற்றிசை மலைத்தொடர் வரிசையின் அழகும், தோட்டங்களும், பார்க்குகளும், நீர் வீழ்ச்சிகளும், அழகிய ஏரிகளும், ஆரோக்கியப் பிரதேசங்களும் நிறைந்து கிடக்கின்றன. கற்றறிந்த கலைஞர்களாலும் ஷை சமஸ்தானம் நிறைந்திருக்கிறது.

## ஜனத்தொகை.

ஷை சமஸ்தானம் 29,000 சதுரமைல்களுள்ளது. ஜனத்தொகை 60 லக்ஷம். 5500 மைல்களுள்ள ரஸ்தாக்களும், 700 மைல்களுக்கு ரெயில்வே ரஸ்தாக்களுமிருக்கின்றன. பிரயாணிகளுக்கும் ஆங்காங்கு சௌகரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## வருமானம்.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னர் சமஸ்தான வருமானம் 2 கோடியாகயிருந்தது. இப்போது $3\frac{1}{2}$ கோடியாக உயர்ந்திருக்கிறது இது புதிதுபுதிதாக வரியை உயர்த்துவதால் வரும் வருமானமல்ல. ஆங்காங்கு புதிது புதிதாக நீர்ப்பாசன வசதிகளும், வேளாண்மையும் விருத்தியாவதால் வரும் வருமானமே.

ஜனப்பிரதிநிதி சபையுமிருக்கிறது. அங்குள்ள அங்கத்தினர்களில் பெரும்பாலோர் உத்தியோகஸ்தரல்லாதவர்களே. பொது ஜன நன்மைக்கான எத்தீர்மானங்களும் அங்கு கொணரப்படும்.

## விவசாயம்.

வேளாண்மைக்கும் தனியாக ஓர் இலாகா விடப்பட்டு அஃதும் மிகவும் முன்னேற்றத்தை யடைந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த விவசாய இலாக்காக்களுள் மைசூரிலுள்ள இலாகா மிகச்

சிறந்ததாயும் மேன்மையாயும் மேற்பார்வையிடப்பட்டு வருகிறது. இதற்காக பெங்களூரில் ஓர் பெரிய விவசாய பரீக்ஷைசாலையுமிருக்கிறது. இது ஓர் சிறந்த இரசாயன சாஸ்திரியால் பார்வையிடப்பட்டு வருகிறது. இதில் உதாரணமாக அநேக விளை நிலங்கள் ஏற்படுத்தப்பட்டு நெல், ராகி, உருளைக்கிழங்கு, கமுகு, கரும்பு முதலியவை பயிரிடப்பட்டும் பரிசோதிக்கப்பட்டும் வருகின்றன. இதனால் இப்பயிர்களை எந்தெந்த புழுக்கள் வந்து அழிக்கிறதென்பதையும் அதற்குப் பரிகாரமாக யாதுசெய்ய வேண்டுமென்பதையும் உணருவதற்கு ஏதுவாகயிருக்கிறது. ஹெப்பால் விவசாயக் கல்விசாலையால் விவசாயக் கல்வி, மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டு டிப்ளோமாக்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக அநேக கிளைச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு அநேக உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சமஸ்தானத்தில் விவசாயத்தைச் செய்வதற்காக சமஸ்தானம் ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் திரவியசகாயமும் செய்து வருகிறது. இதனால் அநேகர் அத்தொழிலிறங்கி சமஸ்தானத்தையும் செழிப்புறச் செய்திருக்கிறார்கள். 1902-ம் ஆண்டு 55 லக்ஷம் ஏக்கர் வேளாண்மை செய்யப்பட்டிருந்தன. இப்பொழுதோ 63 லக்ஷம் ஏக்கர் பண்படுத்தப் பெற்றிருக்கின்றன.

## நீர்ப்பாசனம்.

நீர்ப்பாசனத்தையொட்டி நீர்ப்பாசனம், அணைக்கட்டு; இவ்விரண்டு விஷயங்கள் அவசியம் சொல்லப்படவேண்டும். மைசூருக்கருகிலுள்ள கிருஷ்ண ராஜ ஸாகரா அணைக்கட்டு மிகவும் சிறந்தது. இது காவேரியைக் குறுக்கிட்டு 130 அடிகள் உயரமுள்ளது. இந்தியாவில் இதைக்காட்டிலும் பெரிது வேறு எந்த இடத்திலுமில்லை. எகிப்து தேசத்திலுள்ள அசூன் அணைக்கட்டுக்கு இரண்டாவது இது தான். இது கட்டி முடிந்தவுடன் 1,20,000 ஏக்கர் நிலங்களுக்கு பாய்ச்சுவதற்குப் போதுமான



ஜலம் தேக்கிவைத்துக்கொள்ள முடிகிறதெனக் கணக்கிட்டிருக்கிறார்கள். நிலங்களுக்கு இதனால் கிடைக்கும் பயனைத் தவிர சிவசமுத்திரத்திலுள்ள மின்சாரத்திற்கு இது பிரயோஜனகரமாகவிருக்கிறது. இதைக்கட்டி முடிக்க இராஜாங்கத்திற்கு 4 கோடி ரூபாய் செலவாயிற்று.

சித்தால் திரக்கிலுள்ள வாணி விலாஸ அணைக்கட்டும் இது போன்றதே. இது அமைக்கப்பெற்று பத்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்த ஏரியானது 40 சதுரமைல்களுள்ளது. இது அமைக்கப்பெறுவதற்கும் அதிகமான் தொகை செலவாயிற்று. இதனால் ஆயிரக்கணக்கான நிலங்களைப் பண்படுத்த சௌகரியமாயிருந்தது. இதைத் தவிர அநேக கிளை நீர்ப்பாசனங்களுமிருக்கின்றன.

## கைத்தொழில்.

கைத்தொழிலும் மைசூர் சமஸ்தானம் எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தை புகழத்தக்கது. ஜனங்களுக்கு உபகாரார்த்தமாகப் பலவகைத் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மெடல் பாக்டரி, நெய்யும் சாலை, சோப் செய்யுமிடம் முதலியனவும் அதிகமான மூலதனம் போடப்பட்டு நடந்து வருகின்றன. மைசூர் சோப் பாக்டரியிலிருந்து உற்பத்தியாகும் சோப்பைப் போல் இந்தியாவிலேயே கிடையாதெனக் கூறலாம்.

பின்னல் வேலை, கையினால் நூற்றல், சந்தன மரத்தில் தோற்றங்களமைப்பது முதலிய வேலைகளுக்கும் கல்விச் சாலைகளிருக்கின்றன. இங்கு ஸ்திரீகளும் கற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய ஸௌகரியமிருக்கிறது. கையால் நூற்றல் ஸமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் இதை மிகச் சிரத்தையுடன் முன்னேற்றமடையச் செய்திருக்கிறார்கள்.

ஸமஸ்தானத்தில் மஹாத்மா காந்தி விஜயம் செய்தபிறகு நூற்றல் மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறது. மைசூரிலுள்ள கிராம வாழ்க்கையின் சிக்கனத்திற்கும் செழுமைக்கும் "நூற்றல்" தான் மிகப் பிரதானமென்பதை அவர்கள் நன்கு அறிந்திருக்கி

றூர்கள். இது பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் ஏனைய சுதேச சமஸ்தானங்களுக்கும் ஓர் சிறந்த பாடமாகுமென்பதில் ஐயமில்லை. மைசூரில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த தொழிற்சாலைகளுள், சிவசமுத்திரத்திலுள்ள மின்சார ஜலதத்துவ வேலையும், கிருஷ்ண ராஜசாகர அணைக்கட்டும், பெங்களூரிலுள்ள சந்தனத்தைலத் தொழிற்சாலையும், பத்திராவதியிலுள்ள இரும்புச் சுரங்கங்களும் மிகவும் முக்கியமானவை.

சிவசமுத்திரத்திலுள்ள ஜலதத்துவ மின்சார சாலையானது காலஞ்சென்ற திவான் ஸர். கே. சேஷாத்திரி அய்யர் அவர்களால் துவங்கப்பெற்று சிறிது சிறிதாக விருத்தி செய்யப்பட்டு வந்திருக்கிறது. இது கோலாரிலுள்ள தங்கச் சுரங்கங்களுக்கும், மைசூர், பெங்களூர் முதலிய விடங்களுக்கும் மின்சார சப்ளை செய்துகொண்டிருக்கிறது. காவேரியைக் குறுக்கிட்டு அமைக்கப்பெற்றிருக்கும் கிருஷ்ணராஜசாகர அணைக்கட்டானது சிவசமுத்திரத்தில் தண்ணீரை ஒரே நிலையாக விழும்படி செய்து அவ்வீழ்ச்சியினால் அதிக சக்தியை எழச் செய்வதற்குற்றதாயிருந்து வருகிறது. இன்னும், அணைக்கட்டிற்கருகிலேயே அறுபதடிக்குமேலிருந்து விழுமாறு அமைக்கப்பெற்றிருக்கும் நீர் வீழ்ச்சியாலும் அதிக சக்தி யுண்டாக்கப்பெற்றிருக்கிறது.

இதனால் பெங்களூரிலும், மைசூரிலும் மின்சாரத்தின் உபயோகமானது மிகவும் குறைந்த விகிதத்தில் கிடைக்கிறது.

ஸர். எம். விஸ்வேசுவரய்யாவுடைய ஆட்சியில் மைசூரிலும், பெங்களூரிலும் இரு சந்தனத்தைலச் சாலைகள் துவங்கப்பெற்றன. ஆனால் அதிக செலவை உத்தேசித்து மைசூரிலுள்ள சாலையை மூடிவிட்டார்கள். பெங்களூர் நிலையத்திலிருந்து உண்டாக்கப்படும் தைலமானது இங்கிலாந்து, பிரான்ஸ், இன்னும் ஏனைய தேசங்களிலும் மிக ஆவலுடன் உபயோகப்பட்டு வருகின்றது. இதனால் சமஸ்தானத்திற்குப் பிரதி மாதமும் இரண்டு லக்ஷ ரூபாய் கிடைக்கின்றது.



பத்திராவதி இரும்பு வேலைகளும் ஸர். எம். விஸ்வேசுவரய்யா காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டதாம். இது சிறிது காலம் டாடா கம்பெனியாரால் மேற்பார்வை யிடப்பெற்றுவந்தது. இப்போதோ அது மைசூர் தர்பாரால் நியமிக்கப்பட்ட ஒரு மானேஜ்மெண்டு போர்டால் மேற்பார்வை யிடப்பெற்று வருகிறது. இதன் தலைவர் ஸர். எம். விஸ்வேசுவரய்யா.

## ஐக்கிய நாணயச் சங்கங்கள்.

நடுவகுப்போரின் நன்மைக்காகப் பல விடங்களில் ஐக்கிய நாணயச் சங்கங்களும் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றன. இதனால் கிருஷிகர்களுக்கு எல்லையற்ற நன்மை கிடைத்திருக்கிறது. அங்கங்கே அனேகமாகான பாங்கிகளும் ஜில்லா பாங்கிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

## சுகாதாரம்.

சுகாதார முன்னேற்றத்திற்காக நகரங்களிலும் கிராமங்களிலும் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டிருக்கின்றன, ஜனங்களுக்கு வைத்திய உதவிகளும் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன. சமஸ்தானத்தில் மொத்தம் இருநூறு சிறிய வைத்தியசாலைகள் இருக்கின்றன.

மைசூரிலுள்ள கிருஷ்ண ராஜேந்திர ஆஸ்பத்திரியும், பெங்களூரிலுள்ள விக்டோரியா ஆஸ்பத்திரியும் பொது நிதிகளால் பரிபாலிக்கப்பெற்று வருகின்றன. இன்னும் கண்வைத்திய சாலை, பைத்தியக்காரர்களுக்கு ஆஸ்பத்திரி, பிரசவ ஆஸ்பத்திரி, இதுகள் போன்ற அனேக முக்கிய ஆஸ்பத்திரிகளும் ஒழுங்கான முறையில் உயர்வாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. மைசூரில் ஓர் பெரிய ஆயுர்வேத வைத்தியசாலையும் இருக்கிறது.

இவ்விதம் தற்காலம் அரசாளும் மன்னனின் இருபத்தைந்து வருஷ ஆட்சிக்குள் இத்துணை முன்னேற்றத்தை மைசூர் சம்ஸ்தானம் அடைந்திருப்பதானது மிகவும் வியக்கத்தக்கதென்பதில் ஐயமில்லை!

குறிப்பு:—

மாடன் ரெவியு (Modern Review) என்னும் பத்திரிகையில் தோன்றிய இவ்வியாசம் மொழி பெயர்க்கப்பட்டு "அருணகிரி"யில் வெளிவந்தது.

ஆசிரியர்.

# நமக்குப் பத்திரிகை அவசியமா?

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் சார்பாக "ஏல விவசாயி" என்ற பெயரால் ஒரு மாதப் பத்திரிகை புறப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகை இச்சங்கத்திற்கு அவசியந்தானா? ஏல விவசாயிகளுக்கு இப்பத்திரிகையால் ஏதேனும் பயன் விளையுமா? என்ற விஷயங்களைப்பற்றி ஒரு சிறிது இங்கு ஆராய்வோம்.

இக்காலத்தில் படித்த உலகம் பத்திரிகையைப்பற்றி அறியாதிராது. ஆயினும் நந்தமிழ்நாட்டில் ஐரோப்பா யுத்தத்தின்போதே படித்த மக்கள் பத்திரிகையைப் படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். யுத்தத்திற்கு முன்னர் பொதுவாக இந்தியாவில் சிறப்பாகத் தமிழ் நாட்டில் பத்திரிகையைப்பற்றிப் பெரும்பாலார் ஒன்றும் அறியமாட்டார்கள். அன்றாடம் வரும் சண்டைச்செய்திகளை யறியவேண்டியே நம்மில் ஒவ்வொருவரும் ஆவலோடு படிக்க முற்பட்டனர். அதினின்றும் பத்திரிகைப் படிப்பு நந்தமிழகத்தில் விரிவாகப் பரவிற்றென்னலாம். ஆயினும், இன்னும் நம்மில் பெரும் பாலார் பத்திரிகையின் பயனை யறிந்தவரல்லர். உலகில் நடைபெறும் வீண் சமாச்சாரங்களைப் பற்றிப் பத்திரிகையில் படிப்பதால் என்ன பயன் என்று பலர் இன்னும் கருதுகின்றனர். இவ்வறியாமை நாளடைவில் அனுபவத்தின் மீது ஒழிய வேண்டும்.



பத்திரிகை என்பது உலக சமாச்சாரங்களை மட்டும் அறிவிக்கும் சாதனமன்று. பத்திரிகையின் மூலமாய் ஒருவர் தங்கருத்தை உலகத்தாருக் கறிவிக்கலாம். அவர்கள் கருத்துக்களைத்தாமும் அறியலாம். தனக்கு நேரும் சந்தேகங்களைப் பத்திரிகையின் மூலமாய் வெளியிட்டுத் தக்காரிடத்திருந்து பதிலைப் பெறலாம். நேரிற் காணாத பல அறிஞர்களைப் பற்றி அறிய முடிவதோடு, அவர் தம் நட்டைப் பெறவும் பத்திரிகை சாதனமாகிறது. இலைமறை கனியென நாட்டில் ஆங்காங்கே வசிக்கும் அறிஞர்களை உலகத்திற்கு அறிமுகமாக்கி வைக்கிறதும் பத்திரிகை தான். ஒருவர் தாம் வருந்தி யீட்டிய தம் அறிவுப் பொக்கிஷத்தை பத்திரிகை மூலமாய் வெளியிடுகையில் பிற மக்கள் எளிதில் அதைப் பெற்றுப் பயனடைகின்றனர். பல கஷ்ட நஷ்டங்களுடன் பெரும் பணம் செலவிட்டுப் பல தேசங்களில் திரிந்து, ஆங்காங்குள்ள பல அறிஞர்களைக்கண்டு ஒருவர் அடையக்கூடிய நலன்கள் அனைத்தும், இருப்பிடத்தினின்றும் சொற்பச் செலவில் இரண்டொரு பத்திரிகைகளைப் படிப்பதால் ஒருவர் அடைகின்றார். குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்பவருக்கு ஒரு பத்திரிகை யுண்டாயின் அஃது அத்தொழிலாளரிடையில் ஒற்றுமையை யுண்டாக்குவதோடு, அத்தொழிலில் ஒருவர்க்கொருவர் யோசனைகளைக் கூறிக்கொள்ளவும், பயன் தரத்தக்க அனுபவங்களை யறிந்து கொள்ளவும், தந்தொழிலில் கட்டுப்பாடாய் நின்று தம் ஊதியத்தைப் பெருக்கிக்கொள்ளவும் தூண்டி விடுகிறது. வெகு ஜன வாக்கை விரைவில் வெளியிடும் சாதனம் பத்திரிகை யொன்றே தான்.

பலபேர் ஒருங்குகூடி ஏக காலத்தில் ஒருவர்க்கொருவர் தத்தங் கருத்துகளை யறிந்து கருமங்களை யாற்றுவதற்குச் சங்கக் கூட்டங்களே ஏற்ற சாதனம். ஆனால் அவ்வித மகாநாடுகளை ஆண்டில் ஒன்றிரண்டு தடவைகளில் தான் கூட்டமுடியும். அதற்கும் பெரும் பொருள் செலவிடவேண்டியதுடன், பலபேர் தத்தம் தொழில்களை விட்டுப் பல வேலைகள் செய்யவேண்டும். ஆகவே

அவ்வித கூட்டங்களை அடிக்கடி கூட்டுவது முடியாத காரியம். ஒரு சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆயிரம் பேர் இருப்பினும் அச்சங்கக் கூட்டத்திற்கு அத்தனைப்பேரும் தவறாமல் பல விடங்களினின்றும் வந்து ஆஜராவது முடியாத காரியம். இவ்வித கஷ்டங்களுக்குப் பரிகாரம் பத்திரிகை யொன்றே தான். எவ்வாறெனில், ஒரு மாதப் பத்திரிகையைப் படிப்பவர் பதினாயிரம் பேராயிருப்பினும் ஒவ்வொரு மாதமும் பத்திரிகை யென்ற அரங்கமேடையில் அத்தனைப் பேருடைய கூட்டமும் இருந்த விடத்தினின்றே நடந்து விடுகிறது. அச்சங்கக் கூட்டத்தில் (பத்திரிகையில்) நிகழும் உபந்நியாசங்களும், கருத்துக்களும், செய்திகளும் பிறவும் அப்பதினாயிரம் பேரில் ஒருவர் தவறாது யாவரும் அறிந்துகொள்ளுகின்றனர். இம்முறையில் ஒரு பத்திரிகை வாரப் பத்திரிகையாயின் அதனை வாரக் கூட்டமெனவும், தினப் பத்திரிகையாயின் அதனை தினக்கூட்டமெனவும் கூறுவதற்கென்ன தடை? இவ்வளவு காரியங்களும் சொற்பச்செலவில், பலபேர் தொழில்கெடாது இருப்பிடத்தினின்றே நடைபெறக்கூடிய சங்கமாகிய பத்திரிகையின் பயனை இன்னும் எவ்வாறு புகழ்வது!

பத்திரிகையின் இத்தகைய ஆற்றலையும், பயனையும் நன்குணர்ந்த மேல் நாட்டார் பத்திரிகைகளைப் பொன்னே போல் போற்றி வருகின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்சு போன்ற நாடுகளில் பத்திரிகைகளின் செல்வாக்குச் சொல்லத்தரமன்று. கீழைத் தேசமாகிய ஜப்பானும் மேல் நாட்டாரைப் பின்பற்றி இத்துறையில் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. அந்த நாடுகளில் பொதுப் பத்திரிகைகளே யன்றி மக்கள் தம் வாழ்க்கைக் குரிய பல துறைகளிலும் தனித் தனியே ஒவ்வொரு துறை பற்றிப் பல பத்திரிகைகள் வெளிவந்து வேலை செய்கின்றன. விவசாயிகளுக்கென பத்திரிகை, வியாபாரிகளுக்கென பத்திரிகை, கைத்தொழிலாளருக்கென பத்திரிகை இங்ஙனம் பலவித பத்திரிகைகள் உள்ளன. அந்நாடுகளில் ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஆயிரக்கணக்கான லக்ஷக்கணக்கான ஏராளமான சந்தாதாரர்கள்



இருக்கின்றனர். அந்நாட்டு அரசாங்கத்தையே ஆட்டிவைக்கும் சூத்திராவதானிகளாகிய பத்திரிகைகளும் உண்டு. அப்பத்திரிகைகள் மனம் வைத்தால் அரசாங்கத்தையே அடியோடு கவிழ்த்து விடவுங்கூடும். அப்பத்திரிகைகளைக் கண்டால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அஞ்சி நடுங்கிய சந்தர்ப்பங்களுமுண்டு. உத்தியோகஸ்தர் ஒருவர் ஏதேனும் நீதிக்கு மாறான காரியம் செய்யத் தலைப்படுவாராயின் பத்திரிகை, எப்படியாவது அந்த உளவையறிந்து வெளியிட்டு அவ்வுத்தியோகஸ்தரைத் தண்டனைக்குட்படுத்திவிடும். அரசாங்கத்தாரை விடப் பத்திரிகைகள் உளவறியுந் திறத்தில் மேம்பட்டிருக்கின்றன.

இங்கிலாந்தில் "டைம்ஸ்" என்ற பத்திரிகை ஜான்வால்டர் என்பவரால் 1785-ம் ஆண்டில் தொடங்கப்பட்டதாகும். அப்பத்திரிகை மிகுந்த செல்வாக்குடன் அத்தேசத்தில் இன்றைக்கும் நடைபெற்று வருகிறது. அப்பத்திரிகை இது வரையில் இங்கிலாந்து அரசாங்கத்தில எத்தனையோ மாறுதல்களை உண்டாக்கியிருக்கின்றதென்றால் ஆச்சரிய முண்டாக வில்லையா? 1847ம் ஆண்டில் கிரிமியா யுத்தத்தை மந்திரிகள் கிரமமாக நடத்தவில்லையென்று அப்பத்திரிகை எழுதிய எழுத்துக்கள் அம்மந்திரிகளை இராஜிநாமாச் செய்யும்படி செய்ததும், ஒருக்கால் மெல்வில் பிரபுவின்மீது அப்பத்திரிகை எழுதிய தீவிரமான கண்டனங்களால் அன்னார் அரசியல் துறையினின்றும் அறவே விலகிக்கொள்ள வேண்டியதாயிற்றும். இதுபோன்ற சம்பவங்கள் மற்றும் பலவுண்டு. நண்பர்களே! பத்திரிகைகளின் ஆற்றலைக் கவனித்தீர்களா?

நற்காலப் பயனாய் நமது நாட்டிலும் பத்திரிகையின் பயனை நம்மவர் சமீபகாலமாக அறிந்துவரத் தலைப்பட்டிருக்கின்றனர். அறிஞர் பலர் பத்திரிகைகளை ஸ்தாபித்து வேலை செய்யவும் முற்பட்டு வருகின்றனர். ஆயினும், அவற்றை யாதரித்து வாங்கிப் படிப்பவரின் சங்கை வளர்ச்சியடைவதைக் [illegible] பலபேர்

159609

சந்தாதாரராகச் சேர்ந்து பத்திரிகையை வாங்கினால் தான் பத்திரிகை விருத்தியடையும். நந்தமிழ் நாட்டில் தமிழர் பெரும்பாலார் முன் வந்து ஆதரிக்காத காரணத்தால் இங்கு தோன்றிய பல பத்திரிகைகள் மறைந்து வருகின்றன. மற்றுஞ் சில பத்திரிகைகள் அவற்றை நடத்தும் ஆசிரியரின் திறமையின்மையாலும் அழிந்துபடுகின்றன. உலகில் பிரசித்தியடைந்த பத்திரிகைகள் பலவற்றிற்கும் அவற்றின் ஆசிரியர்களின் திறமையான உழைப்பே காரணமாகும். ஆகவே, இவ்வித குறைகள் நந்தமிழகத்தில் நீங்க வேண்டும். மேலும் ஆங்காங்குள்ள அறிஞர்கள் தத்தம் அனுபவ ஆராய்ச்சிகளோடு கூடிய அரிய விஷயங்களை—கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு உற்சாகத்துடன் ஏராளமாக எழுதி உதவுதலும் வேண்டும். பத்திரிகாபிமானிகள் தத்தம் அனுபவத்தில் காணும் அரிய அனுபவங்களை, புதிய கண்டுபிடிப்புகளை, வம்ச பரம்பரையாய்த் தாம் அறிந்து வந்துள்ள உண்மைகளை உலகோபகாரத்தைக் கருதி அவ்வப்போது பத்திரிகைக்கு அறிவித்து வரவேண்டும். தமக்கு நேரும் ஐயங்களை—தேவையான தகவல்களை அப்போதைக்கப்போது பத்திரிகைக்கு எழுதித்தெரிந்து கொள்ளுவோமென்ற ஊக்கம் வாசகர்களுக்கு உதயமாகவேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் மிடத்திலுள்ள விற்பனைக்கான பொருள்களைப் பற்றிப் பத்திரிகையின் மூலம் விளம்பரம் செய்து விற்பனை செய்யத் தலைப்படவேண்டும். இக்காலத்தில் விளம்பரத்துக்குரிய மிக மிக ஏற்றசாதனம் பத்திரிகையைத் தவிற வேறில்லை. இவ்வித நேர்மைகளுடன் நடைபெறும் பத்திரிகையால் நாட்டுக்குப் பெரு நன்மையுண்டாகும்.

மேல் நாடுகளிலிருப்பதாக மேலே கூறியதுபோல் நம்மிந்தியாவிலும், இங்கு வந்து வசித்துவரும் ஆங்கிலேயர்கள் தமக்குள் ஒவ்வொரு தொழிலுக்கும் பத்திரிகை வைத்து நடத்தத் தலைப்பட்டிருக்கின்றனர். இந்தியாவில் குடியேறி ஆங்காங்கே நிலங்களைச் சம்பாதித்து விவசாயத்தை மேற் கொண்டுள்ள ஆங்கிலேயர்கள் தங்களுக்குள் சங்கங்களையும், பத்திரிகைகளையும் ஸ்தாபித்துத் தங்



களுக்குள் கூட்டுறவுடன் கட்டுப்பாடாக வேலை செய்து மிகுந்த லாபத்தையடைந்து வருகின்றனர். அவர்களைப் பார்த்தாயினும் நம்மவர் உணர்ச்சி பெறலாகாதா? நந்நாட்டில் அதிலும் நந்தென்னாட்டில் எத்தனை விவசாயிகள் சங்கங்களிருக்கின்றன? எத்தனை வர்த்தகர் சங்கங்களிருக்கின்றன? எத்தனைத் தொழிலாளர் சங்கங்களிருக்கின்றன? எத்தனைச் சங்கங்களுக்குப் பத்திரிகைகள் இருக்கின்றன? எத்தனை ஸ்தாபனங்கள் கிரமமாக நடைபெறுகின்றன? எத்தனைச் சங்கங்கள் ஒன்றோடொன்று கூட்டுறவு பெற்று நடைபெறுகின்றன? இவற்றைக் கவனிக்குமிடத்து நம்மனம் புண்ணுகிறது. சங்கங்களென்ற பெயரால் நாட்டில் ஆங்காங்கே சில சிறு ஸ்தாபனங்கள் தோன்றுகின்றன. அவை ஒன்றுக்கொன்று ஒற்றுமையின்றி, பொறாமை யடைந்து, போட்டியிட்டுத் தொழிலில் நஷ்டமடைந்து மறைந்தொழிகின்றன. இஃது நந்தமிழ் நாட்டின் நிலை.

இந்நிலையில் நந்தென்னாட்டில் கூடியவரையில் தக்க அமைப்புகளுடன் தோன்றி முறையாக வேலை செய்துவரும் சிற்சில சங்கங்களின் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கமும் ஒன்றாகவிருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும். இதை வழிகாட்டியாகக் கொண்டு மற்றும் பல சங்கங்கள் நாட்டில் ஏற்படுவதற்குரிய வழியில் இச்சங்கம் நடைபெற்று வரவேண்டும்.

இச்சங்கத்தின் நன்னோக்கங்களைப் பொதுவாக உலகத்திற்கும், சிறப்பாக ஏல விவசாயிகளுக்கும் அடிக்கடி எடுத்துக்கூறி, சங்கத்தின் இலட்சியங்களைச் சாதிப்பதற்கு இதற்கென ஒரு தனிப் பத்திரிகையிருத்தல் வேண்டும். அப்பத்திரிகையின் வாயிலாக ஏல விவசாயத்தை எவ்விதம் மேன்மேலும் அதிக விளைவைக் கொடுக்கக்கூடிய வரையில் வளர்த்து வரலாமென்பதைப்பற்றித் தக்கார் பலர் எழுதிவரவேண்டும். இவ் விவசாயத்தில் பிற இடங்களில் என்னென்ன புதிய முறைகளைக் கையாளுகின்றன ரென்ற விபரங்களை யறிந்து பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டும்.

பயிர்களுக்கு நேரும் பலவித கெடுதிகளுக்குக் காரணத்தையும், அவற்றை நீக்கும் முறைகளைப் பற்றியும் அறியவேண்டும். விளைந்த விளைவைச் சேகரிக்கும் முறையிலும், அவற்றைப் பதம்படுத்திச் சேமித்து வைக்கும் முறையிலும் நல்ல சீர்திருத்தங்களைக் கண்டு பிடிக்கவேண்டும். சேமித்த பொருள்களைத் தக்க விலைக்கு விற்பனை செய்வதற்கேற்ற வழிகளையுங் காணவேண்டும். அயல் நாட்டார் இப்பொருள்களை வாங்கிச்சென்று பலவகைப் பண்டங்களாக மாற்றி உபயோகிக்கும் முறைகளை நாமும் அறிந்து அவ்வாறு இவ்விடத்திலேயே செய்ய முற்படவேண்டும். பண்டங்களின் உபயோகங்களைப் பெருக்குவதற்கும் ஏற்ற வழிகளைக் கண்டு பிடிக்கவேண்டும். இதுபோன்ற மற்றும் பல விஷயங்களைப் பற்றிப் பத்திரிகை வாயிலாக அறிவாளிகள் ஆராய்தல் வேண்டும். ஏல விவசாயிகளாயிருப்போரனைவருக்கும் இச்சங்கத்தின் பயனை இனிது எடுத்துக்கூறி அவர்களனைவரும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்க்கப் பத்திரிகையின் மூலம் பாடுபடக் கூடும். தலைமைச்சங்கத்தினுடையவும், கிளைச்சங்கங்களினுடையவும் நடவடிக்கைகளை அப்போதைக்கப்போது அனைவருக்கும் தெரிவிப்பதற்கும் பத்திரிகையே சாதனம். வியாபாரத்தில் இருக்க வேண்டிய ஒற்றுமை, நாணயம், சொல்தவறாமை, நம்பிக்கை, தைரியம், திறமை யுடைமை முதலிய அருங்குணங்களின் அவசியத்தை அங்கத்தினருக்கும், அல்லாதாருக்கும் எளிதில் எடுத்துக்கூற வல்லதும் பத்திரிகையே. ஏல விவசாயத் தொழிலுக்கு அரசாங்கத்தாரிடமிருந்தும், பிறரிடமிருந்தும் வேண்டிய ஆதரவுகளையும், உதவிகளையும் பெறச் சாதகமாயிருந்து உழைப்பதும் பத்திரிகையே யாகும்.

மேலே கூறியது போன்ற கடன்கள் எல்லாவற்றையும் ஆற்றவே "ஏல விவசாயி" என்ற இப்பத்திரிகைத்தோன்றியிருக்கிறதென அறிகிறோம். அதிலும் அதனைத் திறமையுடன் நடத்துவதற்கேற்ற ஆசிரியரும் அதற்குக் கிட்டியுள்ளார். நமது நண்பராகிய பத்திராதிபர் ஸ்ரீமான் R, நாராயணஸ்வாமியவர்கள் பத்



திரிகையை நடத்தும் விஷயத்தில் ஏற்கனவே அனுபவம் படைத்தவர். மேலும் தேசாபிமானமும், தளராத ஊக்கமும், பொது நலத்தொண்டில் உற்சாகமும் வாய்ந்த ஒரு சிறந்த தேச ஊழியராகும். இத்தகையாரது தலைமையில் "ஏல விவசாயி" நாளடைவில் மேன்மேலும் வளர்ந்தோங்கி ஏல விவசாயிகளுக்கும், நாட்டுக்கும் பெரு நன்மை விளைக்கு மென்பதற்கையமில்லை. இதுகாறும் கூறியவற்றால் (திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கத்திற்கு) பத்திரிகை அவசியமா? என்று தலைப்பில் கேட்ட கேள்விக்கு என்ன விடை கூறுகிறீர்கள்? "ஆம். அவசியம்." என்ற முடிவுக்கு வந்தீர்களாயின் உடனே சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் 'ஏல விவசாயி" ப்பத்திரிகையின் வளர்ச்சிக்குத் துணை புரிய முன் வாருங்கள்.

ஓம். சுபம்.

என். வெங்கடரமணன்.

# தென்னிந்தியா

## ஐக்கிய தோட்டக்காரர்கள் சங்கம்.

(உபாசி சங்கம்)

கும்பல், கூட்டம், சபை, சங்கம் என்ற சொற்கள் மனிதத் தொகுதிகளின் அறிவிற்குத் தக்கவாறு வழங்கப்படுகின்றன. சங்கம் என்ற தனித் தமிழ் வாக்கே இவைகளெல்லாவற்றினும் தலை சிறந்து விளங்குகிறது. ஒரு நதியானது ஒரு சமுத்திரத்தில் சேரும் பொழுது, சங்கமமாகிறது என்று சொல்லுகிறோம். சங்கம் என்ற பதம் அதனடியாகப் பிறந்தது என்று சொல்லலாம். சங்கம் என்ற சரியான சாதனத்தின் மூலமாக அதிகச் சிரமமின்றிப் பல பேரறிஞர்களுடன் அறிவில் அநேகர்கள் ஒன்று படுகிறார்கள். உலக விஷயங்களை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால், சேர்க்கையின் மூலமாகவோ அல்லது வேலையின் மூலமாகவோ ஒவ்வொன்றும், ஒவ்வொருவரும் மேன்மை படைய வேண்டிய திருக்கிறது. பரஸ்பர சகாயத்தின் மூலமாகவே உலகத்திலுள்ளவர்கள் மேன்மை யடையும்படியாக பூமியைக் கடவுள் அவ்வாறு சிருஷ்டி செய்திருக்கிறார். சங்கங்களின் மூலமாகக் கண்டறிந்த உண்மைகள், தத்துவங்களெல்லாம் சேர்ந்து அதில் உண்மையுடன், உறுதியுடன் ஈடுபட்டவர்களைப் பேரறிவிற்குக்கொண்டு செல்லுகின்றது. சங்கத்தின் மூலமாகப் பலர் ஒன்று சேர்ந்து வேலை செய்யும் பொழுது, பலவிடம் பரவியுள்ள மிகச் சிறிய சக்திகளெல்லாம் ஒன்றாய்த் திரண்டு பெருஞ் சக்தியாகக்கூடி, மிகப் பெருத்த வேலைகளையெல்லாம் ஒரு தனி மனிதனால் சாதிக்க முடியாத வேலைகளை யெல்லாம் செய்கிறது.



சங்கம் அறிவிலிகளை அறிவாளிகளாக்குகிறது; பலவீனர்களைப் பலமுள்ளவர்களாக்குகிறது; கெட்டவர்களை நல்லவர்களாக்குகிறது; ஒழுக்கமற்றவர்களை ஒழுக்க முற்றவர்களாக்குகிறது; கௌரவ மற்றவர்களைக் கௌரவமுள்ளவர்களாக்குகிறது; கீழே விழுகிறவர்களைத் தூக்கி விடுகிறது; தெரியாமற் குற்றம் செய்பவர்களை மன்னித்து, அவர்களையும் எப்பொழுதும் போஷித்து, அவர்களுக்குங்கூட ஊக்கமும், உற்சாகமும் அளிக்கிறது; பாரத்தை இலேசாக்குகின்றது. இன்பத்தையும், இலாபத்தையும், இரட்டிப்பாக்குகின்றது; துன்பத்தையும் நஷ்டத்தையும் குறைக்கின்றது; மதத் திமிர், ஜாதித் திமிர், செல்வத் திமிர், செல்வாக்குத் திமிர் முதலியவைகளைத் தயை தாட்சண்ய மின்றித் தக்கபடி துண்டித்துக், கண்டித்து, அவர்களுக்கு நல்ல பாடங்கள் போதித்து, ஒழுங்கு படுத்தி, அவர்களையும் வழிக்கு வரும்படி செய்கிறது. இன்னும் அது அபார வேலைகளெல்லாம் செய்கிறது. "பத்தில் விழுந்த பாம்பும் சாகாது" என்பது நம் நாட்டு முதுமொழியாகும். சுருங்கக் கூறுமிடத்து இந்நாள் உலகம் சங்கங்களால் முன்னேற்றமடைந்திருக்கிறதென்று ஒருவாறு கூசாமல் சொல்லலாம். இதன் அருமை, பெருமைகளை அறிந்தல்லவோ சாது சங்கங்கள், சன்மார்க்க சங்கங்கள், வித்தியா சங்கங்கள் முதலிய இன்னும் வகைவகையான அநேக சங்கங்களை நமது முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள், போற்றினார்கள், வளர்த்தார்கள். இப்பொழுது அச் சங்கங்களெல்லாம் பங்கங்களாயின.

புத்த மதத்தின் போதனைகளுக்குப் பின்பு தான் முக்கியமாக இந்தியாவில், பொதுவாக உலகத்தில் சங்கங்கள் உண்டாயினவென்பது பொது ஜன அபிப்பிராயம். அதை ஒருவர் மறுத்து யௌவன கீழ் நாடு (The Young East) என்ற பத்திரிகையில் கீழ் கண்டவாறு எழுதுகிறார். "பகவான் புத்தரது காலத்திற்கு முன்பே திராவிட நாகரீகம் நிலை பெற்று நின்று சங்கங்கள் உண்டாகியிருந்தன." சங்கங்களின் தொன்மையையும், வன்மையையும், தன்மையையும் அறிந்தது உலகத்திலே பொதுவாக நம்து

பாரத நாடும், சிறப்பாகப் பண்டைத் தமிழ் நாடும், முதன்மையாக நமது பாண்டிய மண்டலமே யாகும். இவ்விஷயத்தில் உலகத்தில் முதன்மை பெற்ற கௌரவம் நமது பாண்டியத்திற்கே சேர்வதாக. நமது நாடும், பாஷைகளும் புராதீனமானவைகள்; காலவரையரையைக் கடந்தவைகள். "சரித்திர காலத்திற்கு முன்னாலேயே நமது தேசத்திலே தான் நாகரீகம் முதலாவதாக உண்டாயிற்று. இங்கிருந்து தான் அது எகிப்துக்குச் சென்றது; அங்கிருந்து கிரீக்குக்குச் சென்றது; பின்பு ரோமுக்குப் போனது. கடைசியில் தான் ஐரோப்பாவில் பரவ ஆரம்பித்தது" என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். நமது மூதாதைகள் நமக்கு அருந்தனமாய் அளித்து விட்டுப்போன அரிய பெரிய கலைகளை நாம் வளர்த்திருக்க வேண்டும்; அல்லது அப்படியே வைத்திருக்க வேண்டும். ஆனால் நாமோ? அவைகளை அறியாது அறிவீனத்தால், காலச் சக்கரத்தின் வேகத்தால் இழந்து விட்டோம். ஆகையால் கண்ணிருந்தும், காதிருந்தும், புராதன நாகரீகமிருந்தும் நாம் குருடர்களென்றும், செவிடர்களென்றும், அநாகரீகர்களென்றும் பல தேசத்தினர்களால் அழைக்கப்படுகிறோம். போதாக்குறைக்கு அன்னியர் ஆட்சியின் அடியில் அகப்பட்டிருப்பதால், அவர்கள் நம்மை அடிமைகளென்று அழைக்கிறார்கள். உலகத்தில் நாமிருக்கும் தற்கால நிலைமை எந்த உண்மை இந்தியனுடைய உள்ளத்தையும் உருக்காமலிருக்காது; அவன் கண்ணீரையும் வடிக்காமலிருக்காது; இந்நிலைமைக்குக்காரணம்? நமது ஒற்றுமைக் குறைவே.

நேற்று நாகரீகமடைந்த ஆங்கிலர்கள் நம் நாட்டிற்கு எவ்விதம் வந்தார்கள்? சங்கத்தின் மூலமாகவே. நம் நாட்டை எவ்வாறு கைப்பற்றினார்கள்? சங்கத்தின் மூலமாகவே. நம்மை இப்பொழுது எவ்விதம் ஆண்டுகொண்டிருக்கிறார்கள்? சங்கத்தின் மூலமாகவே. ஐரோப்பியர்கள் கல்விமான்களாகவும், செல்வவான்களாகவும், செல்வாக்கினர்களாகவும் விளங்கி, மற்ற நாட்டார்கள் மதிக்கும்படியாக வாழக்காரணம் என்ன? ரகசியம் ஒன்றுமில்லை,



எல்லாம் பகிரங்கமே. அவர்கள் சங்கத்தின் மர்மத்தை, ஒற்றுமையின் சக்தியை என்று அறிய ஆரம்பித்தார்களோ, அன்று முதல் அவர்கள் அதிவேகத்தில் அபிவிருத்தியடைய ஆரம்பித்திருக்கிறார்கள். எனது பிரிய நண்பர் ஸ்ரீமான் A. ராமஸ்வாமி அவர்கள் சங்கங்களின் பயன்களைப்பற்றி எழுதிய கட்டுரை இப்பத்திரிகையின் இந்த இதழிலேயே வெளிவரப்போவதால், இந்த உப விஷயத்தை இத்துடன் நிறுத்துகின்றேன்.

தற்காலத்தில் நமது தேசத்தில், அதுவும் நமது ராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்ட பலவித சங்கங்களில் "தென்னிந்திய ஐக்கிய தோட்டக்காரர்கள் சங்க"த்தைப்பற்றி ஏல விவசாயிகளாகிய நாம்—திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் அங்கத்தினர்களாகிய நாம் அதிகமாக அறிந்து கொள்ளவேண்டியது அதிக அவசியமாகும். நம் நாட்டில் மலைப்பிராந்தியங்களில் தோட்டக் கிருஷிசெய்து, ஏராளமாகத் திரவியங்களைத் திரட்டிக்கொண்டு போகும் பொருட்டு ஐயர்லாண்டு, ஸ்காட்லாண்டு, இங்கிலாண்டு முதலிய ஐக்கிய ராஜ்யத்திலும், இன்னும் வேறு நாடுகளிலுமிருந்தும் வந்திருப்பவர்கள் ஓர் சங்கமொன்று தங்கள் நலத்திற்கெனக் கண்டு, நன்கு நிர்மாணித்து, நன்கு வேலைசெய்து, நமது நாட்டுச் செல்வங்களையெல்லாம் வடிகட்டிக்கொண்டு போகிறார்கள். இது நம் கண்களைத் திறக்கவில்லையா? நமக்கு ஆவேசத்தை உண்டாக்கவில்லையா? பண்டைப் பெருமைகளை எண்ணி, எண்ணி, ஏங்கி வீணே இருந்து ஏமாறிப்போகாமல், நாமும் இது போன்ற ஸ்தாபனங்களைக் கண்டேனும் இனிமேல் இதனிலும் தீரமாக, தீவிரமாக உழைப்போமாக. "எங்கள் பாட்டனுக்குக் குதிரையேறிக் குண்டி காய்த்துவிட்டது; நடந்து, நடந்து எனது கால்கள் தேய்ந்து விட்டன" என்ற இகழ்மொழி போன்றவைகளுக்கு இலக்காகாது, வீணாகப் பண்டைப் பெருமைகளைக் கொண்டாடாமல் நாம் செய்யவேண்டிய முக்கிய வேலைகளைச் செய்வோமாக.

## உபாசி சங்கம்.
## (U. P. A. S. I.)

1893-௵த்தில் பங்களூரில் பலவகைத் தோட்டக்காரர்கள் சங்கங்கள் ஆதரவில் கூடிய மகாநாட்டின் பயனாகத் தென்னிந்தியா ஐக்கிய தோட்டக்காரர்கள் சங்கம் (The United Planters' Association of Southern India = U. P. A. S. I. = உபாசி சங்கம்) ஸ்தாபிக்கப்பட்டது. அடுத்த வருடத்தில் அதாவது 1894வது ௵த்தில் அதே இடத்தில் அதன் முதல்வது பொதுக் கூட்டம் கூடியது. தென்னிந்தியாவில் பலவகையான தோட்டக் கிருஷிக் கைத்தொழிலின் நன்மைகளையும், உலகத்தின் நானு பக்கங்களில் பரவியிருக்கும் இத்தொழிலையும் விர்த்தியாக்கவும், காப்பாற்றவும் முக்கிய நோக்கமாகக்கொண்டு இந்த உபாசி சங்கம் (U. P. A. S. I.) ஏற்படுத்தப்பட்டது.

### அங்கத்தினர்கள்.

இப்பொழுது இச்சங்கத்திற்குத் தென்னிந்தியாவிலிருக்கிற 13 தோட்டக்காரச் சங்கத்தார்களும், தோட்டக் கிருஷியில் பிரியமும் சம்பந்தமுமுடைய சில தனி நபர்களும், சில வியாபாரக் கம்பெனியார்களும் அங்கம் பெற்றிருக்கிறார்கள்.

### பிரதிநிதித்துவம்.

இந்த சங்கத்தைச்சேர்ந்தவர்கள் தங்களில் ஒருவரைத் தெரிந்தெடுத்து, அவரைத் தங்களுடைய சங்கப் பிரதிநிதியாகச் சென்னைச் சட்டசபைக்கு அனுப்புகிறார்கள். இன்னும் இதன் கிளைச் சபைகளாய்த் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருப்பவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரதிநிதியை ஸ்ரீ மூலம் பிரஜா சபைக்கு அனுப்புகிறது. திருவாங்கூர் ஒன்றுபட்ட தோட்டக்காரர்கள் சங்கம் அதன் பிரதிநிதி ஒன்றைத் திருவாங்கூர் சட்டசபைக்கு



அனுப்புகின்றது. விபரம் இதன் முடிவில் அறிவிக்கப்படும். மைசூரிலிருக்கும் ஐரோப்பிய தோட்டக்காரச் சங்கங்களுக்கு அச் சமஸ்தானத்தின் பிரஜா சபையிலும், சட்டசபையிலும் ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### நிர்வாகம்.

பல இந்திய ஏஜன்டுகளைத் தென்னிந்தியா முற்றிலும் ஏற்படுத்தி, ஐந்து பிரிவாக (Division) ப்பிரித்து, ஒவ்வொரு பிரிவையும (Division) ஒரு ஐரோப்பிய சூப்பிரண்டுக்கு அடியில் வைத்து ஒரு தொழில் இலாகாவை இச்சங்கம் நடத்துகிறது. தேயிலைக்காக நெல்லிக்கோட்டையிலும், ரப்பருக்காக முண்டகாயத்திலும், காப்பிக்காக சித்தாபூரிலும் மாதிரித் தோட்டங்கள் ஏற்படுத்தி ஒவ்வொன்றிற்கும் ஒன்றாய் ஆக மூன்று சாஸ்திரீய நிபுணர்களை நியமித்து ஒரு சாஸ்திரீய இலாகாவை நிர்வகிக்கின்றது. ஐரோப்பியத் தோட்டக்காரர்கள் சமூகத்திற்கு உதவும் பொருட்டும், கஷ்டங்களை நிவர்த்திக்கும் பொருட்டும் ஒரு நிதி இருக்கிறது. நல்ல சாமான்களை வாங்கும் நிமித்தம் ஐக்கிய முறையில் ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. உபாசி சங்கத்தோடு இணைக்கப்பட்ட ஜில்லா சபை அங்கத்தினர்களுக்கும், உலகத்திலுள்ள பல சாஸ்திரீய ஸ்தாபனங்களுக்கும் "பிளாண்டர்ஸ் கிராணிகிள்" (The Planters' Chronicle) என்ற பெயருடன் 1906வது ௵த்திலிருந்து நடத்திவரும் ஆங்கில வாரப் பத்திரிகையை இச்சங்கம் இனாமாக அனுப்புகிறது. ஒவ்வொரு ஜில்லாத் தோட்டக்காரர்கள் சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் வீதம் ஆக்கப்பட்ட பொதுக்கமிட்டியாலும் (General Committee), அக்ராசனர், தோட்ட மெம்பர் (சட்டசபை அங்கத்தினர் = The Planting Member) தொழில் மெம்பர் (Labour Member) தேயிலை, ரப்பர், காப்பி ஆகிய இவைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் தனித் தனியே ஒரு பிரதிநிதி வீதமாய் எல்லா ஜில்லா சபையாராலும் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகள் ஆகிய இவர்களால் ஆக்கப்

பட்ட ஒரு நிர்வாக சபையாலும் இச்சங்கத்தின் சகல காரியங்களும் நடைபெறுகின்றன. இந்த நிர்வாக சபையில் தேயிலைத் தொழில் முதலியவைகளுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் நான்கு பிரதிநிதிகளில் எதிர்பாராது நிமையென்று ஏற்படும் காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதற்காகவே தேர்தல் சமயத்தில் நாலு துணை அங்கத்தினர்கள் (Members-in-waiting) தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு இவர்கள் துணை அங்கத்தினர்களை ஏற்கனவே தெரிந்தெடுத்து வைத்திருப்பதால், ஏற்பட்ட தொகை அங்கத்தினர்கள் வரவில்லையென்று வருந்திக்கூட்டத்தைத் தள்ளிவைக்கவேண்டிய அவசியமில்லை. ஏல விவசாயிகள் சங்கத்தின் தலைமைச் சங்கமும், அதன் கிளைச் சங்கங்களும் இதனைக் கவனிக்குமா? அனுஷ்டிக்குமா? இதன் முறையைத் தள்ளுதலைக் காட்டிலும் கொள்ளுதலே சிறந்தது.

## இணைப்பு.

லண்டனிலிருக்கும் தென்னிந்திய சங்கமே (South Indian Association) அங்கு இதற்குப் பிரதி நிதியாக விருக்கிறது. சென்னை வியாபார சங்கத்தில் (Chamber of Commerce) இது சேர்ந்திருக்கிறது. கல்கத்தா இந்தியத் தேயிலைச் சங்கத்தினோடும் திருவாங்கூர் ஒன்றுபட்ட தோட்டக்காரர்கள் சங்கத்தினோடும் ஒற்றுமைப்பதோடு, இந்திய தேயிலைவரிக் கமிட்டியிலும் (Indian Tea cess Committee) அங்கம் வகிக்கின்றது.

## சந்தா.

ஒவ்வொரு ஜில்லா சபையின் அடியில் கிருஷி செய்யப்பட்டிருக்கும் எல்லா பூமிகளுக்கும் அதனதன் சொந்தக்காரர்களோ, ஏஜண்டுகளோ தேயிலைக்கு ஏக்கர் 1-க்கு ரூ 1—0—0 வீதமும், ரப்பருக்கு ஏக்கர் 1-க்கு ரூ 0–12–0 வீதமும், காப்பிக்கு ஏக்கர் 1-க்கு ரூ 0–6–0 வீதமும், மற்றும் பிற சிறு விளை பொருள்களுக்கு ஏக்கர் 1-க்கு ரூ 0–6–0 வீதமும் சந்தாச் செலுத்த வேண்டும்,



இவ்வித சந்தாவைத் தவிர்த்து, ஒப்புக்கொள்ளப்பட்ட செலவுகளையும், வீதாச்சார செலவுகளையும், அப்போதப்போது ஜெனரல் கமிட்டியால் தீர்மானிக்கும் செலவுகளையும் ஜில்லாச் சங்கங்கள் கொடுக்கவேண்டும். ஒரு ஜில்லா சபைக்குள்பட்ட விடத்தில் எங்கேனும் பயிரிடப்பட்டால், அடுத்த கணக்கு வருஷத் திற்குப் புதிய பூமிக்குச் சந்தாக் கொடுக்கவேண்டும். ஒரு வியாபாரக் கம்பெனி முன்பணமாக வருடம் 1-க்கு ரூ 150 சந்தாச் செலுத்த வேண்டும். தனியான ஒரு நபர் வருடந் தோறும் ரூ 50 முன்பணமாகச் சந்தாச் செலுத்தவேண்டும்.

## அங்கத்தினர்கள்

## ஜில்லா தோட்டக்காரர்கள் சங்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆனை மலை தோட்டக்காரர்கள் சங்கம் | | |
| 2 | மத்திய திருவாங்கூர் | ,, | ,, |
| 3 | குடகு | ,, | ,, |
| 4 | கண்ணன் தேவன் | ,, | ,, |
| 5 | முண்டகாயம் | ,, | ,, |
| 6 | மைசூர் | ,, | ,, |
| 7 | நெல்லியம்பதி | ,, | ,, |
| 8 | நீலகிரி | ,, | ,, |
| 9 | நீலகிரி-வயநாடு | ,, | ,, |
| 10 | சேர்வராய் | ,, | ,, |
| 11 | தெற்குத் திருவாங்கூர் | ,, | ,, |
| 12 | மேற்குக் கடற் கரை | ,, | ,, |
| 13 | வயல் நாடு | ,, | ,, |

## அங்கத்தினர்களாயிருக்கும் கம்பெனிகள்.

1 அக்ரிகல்சரல் சர்வீஸ் பீரோ, பங்களூர்.
2 அனுபுரா காப்பி ஒர்க்ஸ், கோயமுத்தூர்.
3 அஸ்பின்வால் அண்டுகோ, கொச்சி.

4 பேலி அண்டு பிராக், நீலகிரி.
5 பின்னிஸ் எஸ்டேட்ஸ், மதராஸ்.
6 சிலியன் நைட்டிரேட் கமிட்டி, கல்கத்தா.
7 டாரா ஸ்மெயில் அண்டுகோ, ஆலப்பள்ளி.
8 இங்கிலீஷ் அண்டு ஸ்காட்டிஸ் ஜாயிண்ட் கோவாப்பரேடிவ் ஹோல் சேல் சொசைடி, கள்ளிக்கோட்டை.
9 ஹாரிஸன் அண்டு கிராஸ் பீல்டு, கொல்லம்.
10 மதுரா கம்பெனி, கொச்சி.
11 மார்ஷல் சன்ஸ் அண்டுகோ, கோயமுத்தூர்.
12 பாரி அண்டுகோ, மதராஸ்.
13 பியர்ஸ் லெஸ்லி அண்டுகோ, கள்ளிக்கோட்டை.
14 டி. ஸ்டேன்ஸ் அண்டுகோ, கோயமுத்தூர்.
15 டி எஸ்டேட்ஸ், கோயமுத்தூர்.
16 யுனைட்டட் காப்பி சப்ளை கம்பெனி, கோயமுத்தூர்.
17 வால்கார்ட் பிரதர்ஸ், தலைச்சேரி.

நமது சங்கத்தின் அங்கத்தினர்களைத் தட்டி, எழுப்பவேண்டும், அவர்களுக்கு நூதன உற்சாகமும், ஊக்கமும் உண்டாக்க வேண்டுமென்று கருதியே இங்கு இவ்வாறு இந்த ஐரோப்பிய தோட்டக்காரர் சங்கத்தைப்பற்றி விவரித்து எழுதப்பட்டிருக்கிறது.

குடகிலும், கொச்சியிலும், மைசூரிலும், திருவாங்கூரிலும், ஆனைமலையிலும், ஏற்காடு மலையிலும், நீலகிரியிலும், மலையாளத்திலும் இன்னும் அநேக விடங்களிலும் இருந்துகொண்டு, ஆங்காங்கு வசதிகளுக்குத்தக்கவாறு, கிளைச் சங்கங்கள் (ஜில்லா சங்கங்கள்) அமைத்து, சிறப்பட நடத்தி, தென்னிந்தியா ஐக்கிய தோட்டக்காரர்கள் சங்கம் என்ற தாய்ச் சபையுடன் இக்கிளைகளை இணைத்து, ஒற்றுமையுடன், ஒழுங்குடன் நமது நாட்டில் அயல் நாட்டினர்கள் நாமே நாணித் தலை குனியும்படியாக வேலைசெய்து, மேன்



மையடைந்து கொண்டிருக்க, திருவாங்கூர் மலைப்பிராந்தியங்களில் ஏலக் கிருஷி செய்கிற பெரும்பாலும் ஒரு தாலுகா வாசிகளாகிய நாம் ஏற்படுத்தியிருக்கும் சங்கத்தில் சிலர் வீண் சில்லரை மனஸ்தாபங்களையும், சொந்த விஷயங்களையும் பொது விஷயங்களில் கொண்டுவந்து புகுத்திக் காரியக்கெடுதிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். “நான் தான் பெரியவன்” என்ற எண்ணம் சிலருக்குண்டாகி, அவ்வெண்ணங்கள் நாளாவட்டத்தில் தடித்துப் பலருக்கும் அதிருப்தி உண்டாக்கிக்கொண்டிருப்பதால், பல நற்காரியங்கள் இலகுவில் முடிய வழியில்லாமலிருக்கின்றன. இது வருந்தத்தக்கது; வெறுக்கத்தக்கது. பொருளாதார விஷயங்களில் தக்க நிர்மாணத்துடன், ஏற்ற திட்டங்களுடன் முறையுடன் நடந்து கொள்வதால் தான் ஐரோப்பியர்கள் செல்வமுற்று, செல்வாக்குப் பெற்று, உலகம் மதிக்குமாறு வாழ்கிறார்கள். நமது தேசத்தினர்கள் ஒற்றுமைக் குறைவாலல்லவோ 33 கோடி ஜனங்களடங்கிய, ஒரு கண்டமெனச் சொல்லத்தகும் நமது தேசத்தை 7000 மைல்களுக்கப்பாலிருக்கும் ஒரு சிறு தீவினர்கள் — அயல் நாட்டினர்கள் — அயல் மொழியினர்கள் ஆளுகிறார்கள்! உண்மையாகச் சொல்லுமிடத்து நம்மைச் கேவலமாகக் கருதியே ஆளுகின்றார்கள். இதைக் கண்டு நமக்கு வெட்கம் உண்டாகாமலிருப்பது, ரோஷம் உண்டாகாமலிருப்பது, ரத்தம் கொதிக்காமலிருப்பது, ஆவேசம் உண்டாகாமலிருப்பது ஆச்சர்யமே. எடுத்துக்கொண்ட விஷயம் வேறு. இது இப்படி இருக்கட்டும்.

அயல் நாட்டினர்களிடமிருந்து நாம் கொள்ளவேண்டிய விஷயங்கள் பல; தள்ள வேண்டிய விஷயங்கள் பல. மேற் காட்டிய சங்கத்தைப் போன்று, நம் சங்கத்தைச் சரியாய் நடத்தினால் அநேக நன்மைகள் உண்டாகாதா? அப்படிச் செய்வதை யார் தடுக்கிறார்கள்?

சிலர் தாங்கள் முதலில் கொண்ட கொள்கைகளை மாற்றுவதே கிடையாது. தங்கள் பிடிவாதக்கொள்கைகள், அபிப்பிராயங்கள் தவறு என்று பிறரால் நன்கு உணர்த்தப்பட்டுத் தாங்களே அறி

ந்துகொண்ட பின்புகூட அவைகளை மாற்றி, நேரான வழிக்கு வருவதில்லை. எதிலும் விட்டுக்கொடுப்பதில்லை. "நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்பதைப்போன்று சிலருடைய வாதமிருக்கும். இவ்வித நோய்க்கு நமது சங்கத்தை உட்படுத்தாதிருக்கத் தலைவர்கள் வேண்டுவன செய்யவேண்டும். "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்பது அருட்பிரகாசவள்ளலாரின் பொன்னுரைகள். நமது சங்கத்தில் பரஸ்பரம் தாண்டவமாடத் தக்கவாறு தலைவர்கள் நடந்து கொண்டால், இவர்களை நம்பியிருக்கும் ஏல விவசாயிகள் சந்தோஷமும், இலாபமும் அடைவார்கள்.

"எப்பதம் வாய்த்திடுமேனும்–நம்மில் யாவர்க்கு மந்த நிலை பொதுவாகும் முப்பது கோடியும் வாழ்வேம்–வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வேம்" என்ற தமிழ் நாட்டுத் தேசீயக் கவி அரசரின் அருமையான உபதேசத்தைக் கவனித்தேனும், தலைவர்கள் தங்களுக்காகவும் தங்கள் சகோதர விவசாயிகளுக்காகவும் சுயநலத்தை கூடியமட்டில் கவனிக்காது, பரநலத்தொண்டைக் கவனித்து உண்மையுடன் உழைத்துத் தத்தம் கடமைகளைப் பூர்த்தி செய்வார்களாக.

நல்ல காரியங்களைத் தடுப்பவர்களையும், அவைகளைச் செய்யவொட்டாமற் செய்கிறவர்களையும் தயை தாட்சண்யமின்றிக் கீழே தள்ளிக் காரியங்களை முடித்துவிடுங்கள். அவர்களை ஒருக்காலும் விலக்கக்கூடாது, விலகும்படி செய்யவும்கூடாது. அவர்களும் நியாயத்திற்குக் கடைசியில் கட்டுப்பட்டு வருவார்கள். ஒவ்வொருவருடைய எதேச்சாதிகாரத்தை அடக்குவது சங்கத்தின் முக்கிய வேலையாகும். சங்கத்தில் ஒற்றுமை நிலவவேண்டும்; உழைப்பின் வாசனை உண்டாகவேண்டும்; சமத்துவம் உதிக்கவேண்டும்; சகோதரத்துவம் பெருகவேண்டும்; சுதந்திரம் பொங்கிப் பொங்கி ஓடவேண்டும். சங்கத்தை இவ்வாறு செய்வது அங்கத்தினர்கள் கைவசமேயிருக்கிறது. அவர்களும் அதை அப்படியே ஆர்வத்துடன் ஆக்குவார்களாக.

நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.



# சங்கங்களும் அவற்றின் பயனும்.

நாகரீகத்தின் தன்மைக்கேற்றபடி நாட்டில் சங்கங்களும் நாளுக்கு நாள் மலிந்து வருகின்றன. உலகத்தில் சென்ற நூற்றாண்டைவிட இவ்விருபதாம் நூற்றாண்டில் எவ்வளவோ சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. ஜாதி, மதம், பாஷை, நீதிபோதம் முதலிய விஷயமாக இந்தியாவிலும் அநேக சங்கங்கள் உண்டாயிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் ஜாதிச் சங்கமில்லாவிடினும் சமயம், சீர்திருத்தம், வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் முதலிய பல்வேறு சங்கங்கள் தோன்றி, வேலை செய்து வருகின்றன. நம் நாட்டிலுள்ள சங்கங்களுக்கும் ஐரோப்பிய சங்கங்களுக்கும் நடவடிக்கையில் மிகுந்த வித்தியாசமுண்டு. நம் நாட்டில் நியோகி சங்கம், வைசிய சங்கம், விசுவப்பிராமண சங்கம், தேவாங்க சங்கம், நாயுடு சங்கம், வன்னியர் சங்கம், மருத்துவர் சங்கம், ஆதிதிராவிட சங்கம் முதலிய ஜாதி சங்கங்கள் அநேகம் தோன்றியுள்ளனவாயினும், அவை பெரும்பாலும் தத்தம் ஜாதியின் உயர்வைப் புகழ்ந்து புகழ்ந்து தற்பெருமையும், தன்னலமும் பாராட்டிக்கொண்டு, ஏதோ தமது முன்னேற்றத்திற்குரிய சில தீர்மானங்களைத் தேற்றிக்கொண்டு, அம்மட்டோடு திருப்தியுறுகின்றனவேயன்றி, இதர சமூகத்திற்கு எவ்வழியில் உதவி புரியலாம்? தேசத்தை எந்தவகையில் முன்னேற்றமடையச் செய்யலாம்? தேசவிடுதலைக்கேற்ற வழியில் எவ்வளவு தூரம் முன்னேறிச் சென்றுள்ளோம்? இன்னும் எவ்வளவு தூரம் செல்லவேண்டும்? அதற்குவேண்டிய சாதனமென்ன? என்பன முதலாய பரந்த நோக்கத்தோடு வேலை செய்யக்கூடியவை அவற்றில் மிகச் சிலவேயெனக்கூறவேண்டியிருக்கின்றது. இந்த வகு

ப்புச் சங்கங்களால் நாட்டிற்கு நன்மையொன்றுமில்லாவிட்டாலும் இவை தத்தம் பெருமையைப் பெரிதும் பாராட்டிக்கொண்டு பிற சமூகத்தோடு கலாம் விளைவிக்காமல் அடங்கியிருப்பதே நாட்டிற்கு நன்மையாமெனச் செப்பலாம்.

இனி, சன்மார்க்க சங்கம், கலைமகள் சங்கம், ஞானசம்பந்தர் சங்கம், திருக்குறள் சங்கம், வித்யாபிவிருத்தி சங்கம் முதலிய நீதி, மதபோதனைகளைச் செய்வதாய்த் தோன்றியுள்ள சங்கங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இவை ஆரம்பத்தில் ஆடம்பரமாய்த் தோன்றிப் பிறகு நாளுக்கு நாள் ஊக்கங்குன்றி ஸ்தம்பித்து விடுகின்றன. இவைகள் உண்மையாகவே உழைக்கலாமென்றோ, அல்லது கௌரவமாக மாத்திரம் பெயர் வைத்துக் கொண்டிருந்துவிடலாமென்றோ, அல்லது ஏதாவதோர் கொள்கையை நிலைநாட்டவேண்டுமென்றோ தோன்றுகின்றன. துவக்கத்தில் எவ்விதக்கொள்கையுடன் தோன்றியபோதிலும் நாளடைவில் இவற்றில் பெரும் பாலானவை ஊக்கங்குன்றி சோம்பிச் சோர்ந்து ஒரே சமநிலையில்போய் நின்று விடுகின்றன. இவற்றில் சில ஒரு சமயம் தளராவூக்கத்தோடு நடைபெறக்கூடியனவாயிருப்பினும் நாட்டிற் பரவியுள்ள ஆபாசமும், அசம்பாவிதமான மூடக்கொள்கைகளைத் துணிந்து கண்டிக்க வலிமையற்றவையாய்ப் போகின்றன. சிவ, விஷ்ணுக்களின் ஆண், பெண் குறிகளின் சேர்க்கையே சிவலிங்கமென்றும், பிருந்தையின் கற்பழித்ததுமன்றி அவளிடமிருந்த பேராசையினாலேயே விஷ்ணு துளசி மாலையாக அவளை அணிந்திருக்கிறாரென்றும் உள்ள புராணப் பொய்க்கதைகளையும், இவைபோன்ற மற்ற அசம்பாவிதங்களையும் நீக்கி உண்மையும் ஒழுக்கமுமான விஷயங்களுக்கு மதிப்பளித்து சீர் திருத்தம் செய்யச் சக்தியில்லாத சங்கங்கள் தோன்றுவதினும், தோன்றாமலிருப்பதே நலம். ஆகவே இந்த நீதிபோதகச் சங்கங்களென்று தோன்றியிருப்பனவற்றாலும் நாட்டிற்கு நன்மையில்லையென்று சொல்லிவிடலாம்.



இனி, வேலைசெய்யும் சங்கங்களைச் சிறிது ஆராய்வாம். இந்த வகையில் சைவ சித்தாந்த சங்கம், ஜீவகாருண்ய சங்கம், பரிசோதனைச் சங்கம், மொழி வளர்ச்சிச் சங்கம் முதலியன அடங்கும். திருநெல்வேலி சைவ சித்தாந்த சங்கம் பல பழைய சங்க நூற்களையும், சைவ நூற்களையும் தேடித்திரட்டி, அச்சிட்டுத் தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும் தேசத்தில் பரவச்செய்து வருகின்றது. கோலார் தங்கவயல் ஜீவகாருண்யச் சங்கமும் கூடியவரையில் பாடுபட்டு வருகிறது. இவ்விரண்டு சங்கங்களும் முக்கியமாய்த் தமிழ் நாட்டிற்கே உரியனவாய்க் காணப்படுகின்றன. பரிசோதனைச் சங்கம் ஆந்திர மாகாணத்தில் வேலை செய்கிறது. இந்தப் பரிசோதனைச் சங்கத்தின் பயனாக பழைய காலத்துக் கல்வெட்டுகளும், செப்புப் பட்டயங்களும் அநேகமாய்க் கிடைத்திருப்பதாய்த் தெரிகின்றது. சரித்திரத்திலடங்காதனவும், சரித்திரத்தோடு சேர்க்கத்தக்கனவுமான பல செய்திகள் அதனால் வெளியாய்க் கொண்டிருக்கின்றன. மற்றும் பழைய காலத்து ஏட்டுப் பிரதிகளையெல்லாம் இச் சங்கத்தார் தேடி அவசியமானவற்றை விலைக்கு வாங்கிப் பரிசோதித்து அச்சுப் பொறியேற்றி நாட்டில் பரப்புகின்றனர். ஆந்திர தேசத்தில் இச் சங்கத்தார் செய்யும் வேலைகளால் இந்நாட்டின் பூர்வீகச் சிறப்புகள் வெளியாவதுடன் இது தேசாபிமானத்தையும் மக்களிடையே தளராவூக்கத்தையும் ஊட்டி வளர்ப்பிப்பதாயுமிருக்கிறது.

சைவ சித்தாந்த சங்கம் பாரமார்த்திக விஷயத்தைப்பற்றியதாயிருத்தலின் அதன் பொருட்டு மகிழவேண்டிய தவசியமேயாயினும், தேச நிலைமையை யுத்தேசித்து அதையும் சிறிது சீர்தூக்கவேண்டியது இன்றியமையாததாகிறது. ஆண்டான், அடிமை என்கிற முறையில் ஆஸ்திக புத்தியை வளர்க்கும்பொருட்டு இச்சங்கம் உழைக்கின்றது; ஆயினும், தற்போது நாட்டிற்கு அத்தியந்தாவசியமாக வேண்டப்படுகிற ஆண்மையையும், இலௌகிக ஆராய்ச்சியையும் குன்றச்செய்து, தாய் நாட்டிற் பிறந்த ஏனைய சமயங்களைக் கபடசிந்தனையோடு தழுவித் தற்புகழ்ச்சியோடு ஒங்க

விரும்புகிறதாயிருக்கிறபடியால் தற்கால நிலைமைக்கு இது அத்தியந்த அவசியந்தானோ? என்ற எண்ணமெழுகின்றது. "சமயம் என்பது கடமைகளில் கவனமும், தளராவூக்கமும், தைரியமும், ஒழுக்கமும், அஞ்சாநெஞ்சும், அன்பும், உண்மையும் வளர்க்கக் கூடியதாயிருக்க வேண்டும்."

இரண்டாவதாகக் கூறப்பட்ட ஜீவகாருண்ணிய சங்கம் தந் தேசத்திற்குத் தற்காலத்தில் மிகவும் வேண்டற்பாலதேயாம். இதுவே இந்நாட்டின் நாகரிகத்தையும், பெருமையையும் விளக்குவதாயிருக்கிறது. காட்டுமிராண்டிகளாயிருந்த அநாகரீக காலத்தில் ஆடு, கோழி, மாடு முதலியவற்றை யறுத்துத்தின்பது எவர்க்கும் இயல்பே. ஆனால், நாகரீகம் மிகுந்துள்ள இக்காலத்திலும் கூட ஓநாய், புலி, கழுகு முதலிய ஜந்துக்களைப்போல மாமிசவுணவையே நாடுவது மக்கள் என்ற இயல்புக்கும், நாட்டின் பெருமைக்கும் குறைவையுண்டுபண்ணுவதாகவே முடியும். இக்குறைவை யகற்றவே இச்சங்கம் பாடுபடுகிறபடியால் இதன் உழைப்பு சிறப்புடையதே. ஆனால், இச்சங்கம் ஆடு, கோழிகளைக்கொல்லாமை புலால் மறுத்தல் ஆகிய கொள்கைகளை மாத்திரம் கொண்டிருத்தல் இது கொண்டிருக்கும் பெயருக்கு முழுப்பொறுத்தமுடையதல்ல. இரக்கமில்லா வண்டிக்காரனிடத்திலகப்பட்டு வருந்தும் வாயில்லா ஜீவர்களாகிய மாடு, குதிரை முதலியவற்றினிடத்திலும், தேசத்தில் யாதொரு வேலையுமின்றி உணவுக்குத் திண்டாடுகின்ற பல்லாயிரம் ஏழை மக்களிடத்திலும் இச்சங்கத்தின் காரியங்கள் பரவவேண்டும். மற்றும் தேசத்தில்—உலகத்தில் யுத்தங்கள் நேரிடாமல் இருக்கக்கூடிய வழிகளையும் இச்சங்கம் ஆராய வேண்டும். ஜீவகாருண்யம் என்ற பெயரைத்தாங்கிய இச்சங்கம் செய்யவேண்டிய வேலைகள் அநேகமுள்ளன. அவற்றை ஓர் கட்டுரையாகச் சமயம் நேர்ந்த விடத்து வரைவாம்.

மொழி வளர்ச்சி விஷயமாக இத்தென்னாட்டில் மதுரைத் தமிழ்ச் சங்கமும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும், ஆந்திரப் பிரசாரிணீ கிரந்த நிலைச்சங்கமும் வேலைசெய்து வருகின்றன. இவற்



றில் முன்னிரண்டும் தமிழ்மொழிக்கும், பின்னாற் கூறப்பட்டது தெலுங்கு பாஷைக்கும் உரியன. இவற்றால் பாஷா ஞானம்பெற்று பண்டிதத்தன்மை யமைந்தோர் அநேகர். இச்சங்கங்களின் சார்பாக பல தமிழ்ப் புத்தகங்களும் தெலுங்கு புத்தகங்களும் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன. மனிதத்தன்மைக்கு மொழி ஒரு முக்கியமான சாதனம். ஆதலால், அம்மொழியை அழகுபெறச் செய்வதற்காகத் தோன்றியுள்ள சங்கங்களால் நலனையென்று மட்டிலும் இயம்பினாற்போதாது. தேசத்திற்குக் கண்ணைக்கொடுக்கும் சங்கங்களென்றுரைத்தலே சிறந்தது. இவற்றில் மதுரைத் தமிழ்ச் சங்கம் மற்றிரண்டு சங்கங்களைவிடக் காலத்தால் முற்பட்டது. ஆயினும், இது நான்காவது சங்கமாகும். இதற்கு முன் 3 சங்கங்கள் தோன்றி மறைந்தன. அவை யொவ்வொன்றும் அநேக கல்விக் களஞ்சியங்களான விலையுயர்ந்த மாணிக்கங்களோடு திகழ்ந்தன. அக்காலத்தில் எழுதப்பெற்ற செந்தமிழ்ச் சொற்களமைந்து, இயற்கை வனப்புகளைத் தெற்றென விளக்கி, வித்யானந்தத்தை விளைவிக்கக்கூடிய அற்புதமான நூற்களைப்போல் ஒரு நூலேனும் தற்காலத்தில் வெளியானதாகக் கூறமுடியவில்லை. இருப்பினும், தற்காலத் தமிழ்ச் சங்கம் அந்நூற்களைக்கொண்டு பலருக்குக் கல்வி புகட்டிப் பண்டிதர்களாக்கிவிடுகின்ற அளவில் அதைப்போற்ற வேண்டியதே. கரந்தைச் சங்கமும் இவ்வாறே செய்கின்றது. இச்சங்கள் மொழியையும், சமயத்தையும் மாத்திரம் வளர்க்கின்றன. எனினும், இவை இவற்றோடு பௌதிகம், இரசாயனம், வான் முதலிய சாஸ்திரங்களையும் பல பாஷைகளிலிருந்து செந்தமிழில் எழுதித் தமிழ்ப் பாஷையை வளர்க்கவேண்டும். இந்த விஞ்ஞானப் பயிற்சியில்லாமையினாலேயே தற்போது பண்டிதர்களெனப்படுகின்றவர்களில் பலருக்கு பாஷா ஞானத்தைத் தவிர பௌதிக சாஸ்திரம் முதலியவற்றைப் பற்றிய விஷயங்களை விளங்காமலிருக்கின்றன. தற்போதைய பண்டிதர்களில் பலருக்குப் பூகோள ஞானமாவது, தேச சரித்திர ஞானமாவது கிடையாது. பூமி உருண்டையென்றால், நகைக்கிறார்கள்,

வாயுவின் அமுத்தும் சக்தி, ஜலத்தின் அமுத்தும் சக்தி முதலியவை யொன்றுமே அவர்களுக்கு விளங்குவதில்லை. வஸ்துக்களின் ஆராய்ச்சியே அவர்களுக்கிருப்பதில்லை. இதற்கெல்லாம் ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய பல பாஷைகளிலிருந்து அநேக சாஸ்திரங்களைத் தமிழில் மொழி பெயர்த்து, அவற்றைப் பண்டிதப் பரீக்ஷைக்கு நியமிக்காததே காரணமாம்.

பண்டிதர்களுக்கோ தற்கால வித்தைகளெல்லாம் இல்லாமையினால் ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு முடிவதில்லை. ஸ்தல புராணங்களையுங்கூட முக்கியப் பிரமாணங்களாகச் சில சமயங்களில் எடுத்தாளுகின்றனர். இவ்வாறுரைப்பதனால் பாஷா ஞானத்தில் குறைந்தவர்களென்று எவரும் கருதற்க. எவ்வளவு சிக்கலான செய்யுளாயிருந்த போதிலும் தமிழ்ப் புலவர்கள் தங்கள் இலக்கணத்திறத்தால் அதைப் பலவித பொருள்களாக விரித்துக் கேட்போர் மனத்தை மகிழும்படி செய்யவல்ல திறமைவாய்ந்தவர்களே. ஆனால் பரந்த நோக்கமும், வஸ்துதத்துவ ஞானமும் மாத்திரம் இவர்களுக்குக் குறைவு என்பதைச் சொல்லவேண்டியிருக்கிறது. எனினும் சில தமிழ்ப் பண்டிதர்களிடத்தில் இக்குறைகள் இல்லாமலுமிருக்கின்றன. ஆயினும் தமிழ்ச் சங்கங்களாயினும், மற்றெந்த மொழிச் சங்கமாயினும் மொழியை வளர்ப்பதோடு அறிவையும் வளர்க்க முற்படுவது பொன்மலர் நாற்றமுடைத்தானது போலாம். சென்னையில் காலஞ்சென்ற K. V. லக்ஷ்மணராவ் என்பவரால் ஸ்தாபித்துப் பாதுகாக்கப்பட்டுவந்த "விஞ்ஞான சந்திரிகா கிரந்தமண்டலி" என்னும் சங்கத்திலிருந்து பல மேதாவிகளின் சரித்திரங்களும், தேச சரித்திரங்களும், மற்றும் பல பௌதிக, ரசாயன சம்மந்தமான புத்தகங்களும் தெலுங்கில் வசனத்தில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன. இவை அறிவு வளர்ச்சிக்குச் சாலவும் பயன் படுவதாயிருக்கின்றன. தேச நிலைமைக்கும் ஏற்றவையாயுள்ளன. ஆனால், அவற்றைச் சற்று விரிவாகவும், செய்யுள் நடையிலுங்கூட எழுதி வெளியாக்கப்பட்டிருப்பின் அச்சங்கம் பாஷையையும் வளர்த்த பெருமையையடைந்திருக்கும்.



இவையன்றி தபாற்காரர் சங்கம், ஆசிரியர் சங்கம் முதலிய அநேக சங்கங்கள் நம் நாட்டிலுள்ளன. இவற்றால் பிறர்க்கு யாதொரு நன்மையுமில்லை; ஆனால், தத்தம் வயிற்றுக்காகப் பாடுபடுகின்றன வென்றுமாத்திரம் செப்பலாம். ஐக்கிய நாணயச் சங்கம் உலகத்திற்கே ஒரு நல்ல ஸ்தாபனமென்று கூறலாம். இதனால் நாட்டிலுள்ள பல ஏழைகள் நல்ல வாழ்வை யடைந்துள்ளார்கள்—இனியும் அடைகிறார்கள். இச்சங்கம் நல்ல நிலைமையோடு வளர்ந்து வருமாயின் தேசம் ஒற்றுமையில் சிறந்து விளங்கும். இணையற்ற நலன்களையெல்லாம் தேசம் அடையும். ஆனால் இந்த உத்தமமானதும், தேச முன்னேற்றத்திற்கு அடிப்படையானதுமான இந்தச் சங்கத்திலுங்கூட பல குழப்பங்களும், மோசங்களும் இருப்பதாகத் தெரியவருகின்றது. இறைவனருளால் இக்கொடுமைகள் ஒழிந்து ஐக்கியச் சங்கங்கள் நல்ல நிலைமையயடைவதாக.

இதுகாறும் நம் நாட்டுச் சங்கங்களைப்பற்றிக் கவனித்தோம். இனி மேல்நாட்டுச் சங்கங்களைச் சிறிது கவனிப்போம். மேல் நாடுகளில் சங்கங்களுக்கு அளவேயில்லை. சமயம், சமூகம் தொழில் முதலிய பல் வேறு துறைகளில் அவர்கள் சங்கங்கள் ஸ்தாபித்து ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடுகின்றனர். மேல் நாட்டார் பெருமைக்காகவும், அழகுக்காகவும் சங்கங்களை ஏற்படுத்துவதில்லை. வேலை செய்வதற்கே அவர்கள் சங்கங்களை ஸ்ருஷ்டிக்கின்றனர் ஒரு சங்கம் ஒரு காரியத்தின் பொருட்டுத் துவக்கப்படுமாயின் அக்காரியம் நிறைவேறும் வரையில் அச்சங்கம் அழியாது. அந்நாட்டில், தொழில் பயிலச் சங்கம், வாணிபம் வளர்க்கச் சங்கம், விவசாயத்திற்குச் சங்கம், விளையாட்டுச் சங்கம் அறிவு வளர்ச்சிக்குச் சங்கம், சமய வளர்ச்சிக்குச் சங்கம், நூல் எழுதச் சங்கம், இயற்கையை யாராயச் சங்கம், உணவுப் பொருள்களைச் சோதிக்கச் சங்கம், நோய்களைத் தடுக்கச் சங்கம் இதற்குத்தான் சங்கம், அதற்குச் சங்கமில்லையென்றுரைக்க முடியாதபடி எடுத்த காரியத்திற்கெல்லாம் சங்கங்களே நிலைக்களனாயிருக்கின்

றன. ஏனெனில், சங்கத்தினாலாகும் நன்மைகளையும், அதன் சக்திகளையும் அவர்கள் நன்குணர்ந்திருக்கின்றனர். சங்கத்தின் அருமையைத் தெரிந்து வேலை செய்வதனாலேயே அந்நாட்டினர் எடுத்த காரியத்திலெல்லாம் வெற்றி பெறுகின்றனர். சங்கத்தினாலாகும் நன்மைகள் இவ்வளவவ்வளவென்று சொல்லிமுடியாது. மேற்குத் தேசங்களில் ஏற்பட்டிருக்கும் பெருத்த வர்த்தகங்களும், வானத்திற் பறக்கும் விமானங்களும், கடலில் ஓடும் பலவிதக் கலன்களும், நிலத்திலூரும் பல்வேறு சகடங்களும், மின்விளக்குகளும், காற்றுத்தீபங்களும், ஒலிக்கவர்ச்சி யந்திரங்களும், துருவ தரிசனங்களும் மற்றும் பல்வேறு வஸ்து முதலிய சமுதாயங்களும் எல்லாம் சங்கங்களினாலாய பயனென்றே கூறவேண்டும். ஏனெனில், சங்கம் வேலை செய்யாவிடில் இவ்வரிய பெரிய காரியங்களை யாரே செய்திருக்கமுடியும்! நீராவியின் வலிமையைக் கண்டுபிடித்தவன் "ஜேம்ஸ்" என்றும், கண்ணாடி செய்யும் விதத்தைக் கண்டுபிடித்தவர் மற்றொருவரென்றும் இப்படி ஒவ்வொரு வஸ்துக்களையும் கண்டுபிடித்தவர் இன்னார் இன்னார் என்று அவர்களுடைய சரித்திரங்களாலறிகின்றோம். ஆயினும், தனிப்பட்ட ஹோதாவில் ஒரு மனிதன் அதிமானுஷ காரியங்களையெல்லாம் செய்து முடித்துவிடமுடியுமா என்பதை யூகிக்குமிடத்து அவர்கள் அவ்வச் சங்கங்களில் சேர்ந்து உழைத்த உழைப்பின் மிகுதியையும், தியாகத்தையும், அவர்களது ஊக்கத்தையுமே அவ்வச் சரித்திரங்கள் வெளிப்படுத்துவதாயிருக்கிறதெனத்தெரிகிறது. மேலும், ஆகாய விமானம் முதலியவைகள் ஒருவர் இருவராலேயே ஆலோசித்து முடித்த முடிவினாலேற்பட்டதல்லவென்றும், பல காலங்களில் பலருடைய யுக்திகளினாலும், உழைப்புகளினாலுமே அவ்வஸ்து சமுதாயங்கள் காரியத்திற்கு வந்திருக்கின்றனவென்றும் தெரிகின்றபடியால், அவ்வாயுவிமானம் முதலியவற்றினுடைய அமைப்பின் முடிவைச் செய்துமுடிக்கச் சங்கங்கள் பல காலங்களில் நீடித்து உழைத்து வந்திருக்கவேண்டுமென்று நிச்சயிக்கலாம். மேலும், இப்பெரிய உலகம் ஆளப்படுவதும் சங்கத்தி



னாலேயே. வானத்திலுள்ள கோளங்களை யாராய்ந்து உண்மையைக் கண்டறிவதும் சங்கத்தினாலேயே. இப் பூமண்டலத்தின் அளவையும், நிறையையும் ஆராய்ந்தறிவதும் சங்கத்தினாலேயே. பல்வேறு கலைகள் வளர்ச்சி பெறுவதும் சங்கத்தினாலேயே. சங்கத்தினாலாகுங் காரியங்கள் இவ்வளவு தான் என்று முடிவு கட்டியுரைக்க முடியாத அவ்வளவு அருமையும் பெருமையுமுடைய காரியங்களெல்லாம் சங்கங்களாற் சாதிக்கப்படுகின்றன. இதனாலேயே "சங்கே ஸக்திஃகலௌயுகே" என்றார் ஒரு ஆரியப்புலவர். "கலியுகத்தில் சக்தியெல்லாம் சங்கத்திலேயே இருக்கின்றது" என்பது இதன் பொருள்.

அதாவது: முன் காலத்தில் தவத்தினாலேயே முனிவர்கள் அரும் பெருங் காரியங்களை யெல்லாம் செய்து வந்தனர். இப்போது அம்முனிவர்கள் செய்ததைப்போன்ற அரும்பெருங் காரியங்களையெல்லாம் சங்கங்களால் செய்யமுடியும் என்பது கருத்து. விசுவாமித்திர முனிவர் தன் தபோபலத்தினால் சிருஷ்டியே புதிதாகச் செய்தாரென்று புராணங்களில் பார்க்கிறோம்; இப்போது அம்மாதிரி சிருஷ்டியை மேல் நாட்டினர் சங்கங்களால் சாதிக்கின்றனர். எப்படியெனில் வேறு வேறு ஜாதி ஸ்தாவரங்களை விதைகளாலும், கொம்புகளாலும் ஒட்டுமாஞ் செடியைப்போல ஒன்றுபடுத்திப் புதிய ஸ்தாவரங்களை யுண்டாக்குகின்றனர். இப்புதிய ஸ்தாவரங்களால் தெய்வ சிருஷ்டியில்லாத புதிய புதிய பூ வகைகளும், கனிவர்க்கங்களு முண்டாகின்றன. மற்ற விலங்கினங்களிலுமப்படியே செய்கின்றனர். அதனால், நல்ல பலமும், சுறுசுறுப்பும் உள்ள ஜந்துக்கள் உண்டாகின்றன. கப்பல் போக்குவரவுக்கு இடையூறாயிருந்த "சூயஸ்" பூசந்தியையும் பலமைல் விஸ்தீரணமுள்ள "பனமா" பூசந்தியையும் வெட்டி மரக்கலப் போக்குவரவுக்கேற்ற கடலாகச் செய்திருக்கின்றனர். தேவேந்திரனுடைய ஆணையின்படி மேகங்கள் வேண்டிய இடத்தில் மழைபொழிகின்றனவென்று புராணங்களிற் காண்கின்றோம். இப்போது மேகங்களையெல்லாம் ஓரிடத்திற்றிரட்டி வேண்டிய அளவு மழை

பெய்வித்துக்கொள்ளத்தக்க சக்தியை மேல் நாட்டினர் சங்கங்களாற் கண்டறிந்திருக்கின்றனர். ஆகாயம், வாயு முதலிய பஞ்ச மகா பூதங்களைக்கொண்டே பிரம்மா சிருஷ்டி செய்கின்றாரென்று புராணப் பிரசித்தம். இப்போதோ அந்தப் பஞ்ச பூதங்களையே வேண்டியபடி—வேண்டிய அளவு ஒடுக்கியும், விரித்தும் விரும்பிய காரியங்களையெல்லாம் சங்கங்களாற் செய்து கொள்கின்றனர். ஆகையினாலேயே "சங்கே ஸக்திஃகலௌயுகே" என்ற சொல் கிளப்பியது. இவ்விதமாக அதிமானுஷச் செயல்களெல்லாம் செய்யமுடிகிறதென்ற நம்பிக்கையுடனேயே அவர்கள்சங்கங்களைப் போஷித்து வியக்கத்தக்க காரியங்களையெல்லாம் செய்து முடிக்கின்றனர்.

நம் நாட்டில் சங்கங்கள் அவ்வளவு ஊக்கமாகவும், உற்சாகமாகவும் வேலை செய்வதருமையாயிருக்கின்றது. ஏனெனில் நமது தேசத்திலுண்டாகும் சங்கத்திற்கு வேலை செய்து பலனடைய வேண்டுமென்ற எண்ணம் அதிகமாயிருப்பதில்லை. எண்ணமேற்படினும் காரியத்திற் காட்டத்துணிவதில்லை. காரியத்திலிறங்கினாலும் வேண்டிய அளவு பணவுதவியிருப்பதில்லை. பணவுதவி இருந்தாலும் ஒற்றுமையிருப்பதில்லை. இந்த ஒற்றுமையில்லாததே நம் நாட்டிற்கோர் பெருங்குறைவு. நம் நாடு ஒற்றுமை கெட்டுச் சுமார் 1500 வருடங்களுக்கு மேலாகின்றது. அன்று முதல் இன்று வரையில் அன்னியர் படையெடுப்பினால் அடிபட்டுச் சிக்குண்டு மொத்துண்டு சுய வலிமையிழந்து ஆண்மைகுன்றி ஏங்கிக் கஞ்சிக் கிரந்து காலங்கழிக்கின்ற நிலைமையில் தற்போதிருக்கின்றது. பிரஜைகளின் உரிமைகளைக் காத்துக்கொள்வதற்கென்றேற்பட்ட தேசிய மகாசபையிலும் இந்த ஒற்றுமையின்மையானது புகுந்து மிதவாதிக்கக்ஷியென்றும், அமிதவாதக் கக்ஷியென்றும் இரண்டாகப் பிளவுண்டாக்கிவிட்டது. மறுபடியும் அமிதவாதக் கக்ஷியில் நுழைந்து ஜஸ்டிஸ் கக்ஷியென்று ஓர் பகுதியைப் பிரித்துவிட்டது. மீண்டும் அத்தேசிய மகாசபையைச் சிதைத்துச் சிதைத்து ஒத்துழையாக் கக்ஷியென்றும், சுயராஜ்யக் கக்ஷியென்றும்,



சுயேச்சைக் கக்ஷியென்றும், ஹோம்ரூல் கக்ஷியென்றும் பலவாறாகப் பிரித்துப்பிரித்து வலிமையைக் குறைத்துவிட்டது. இதனால் காங்கிரஸ் ஏற்பட்டு நாற்பது வருடங்களாகியும் இந்தியாவுக்கு விடுதலையாவது, பிரஜைகளுக்குச் சுய உரிமையாவது ஏற்படாமற் போயிற்று. ஏற்கெனவே நம் நாட்டுச் சங்கங்களின் குணதோஷங்களை யாராய்ந்தோம். மிகப் பிரசித்தமானதும், மிக முக்கியமானதும், மற்றெல்லா நன்மைகளுக்கும் அடிப்படையாயுள்ளதுமான இந்தத் தேசிய மகாசபையும் இந்த கதியாயிருக்கின்றது. என்ன செய்வது! நமது முன்னேற்றத்திற்கு முக்கியமான சாதனமாயுள்ளது ஒற்றுமை. ஒற்றுமையினாலேயே சங்கங்களுக்கு வலிமையேற்படும். அதனாலே எல்லாவற்றையும் சாதித்துக் கொள்ளும் திறமையேற்படும். அந்த ஒற்றுமை இப்போது நமக்குவேண்டும். அதையெப்படிச் சம்பாதிப்பது? அதையும் சங்க மூலமாகத்தான் சம்பாதிக்கவேண்டும். மேல் நாட்டினர் விளையாடவும் சங்கம் நிறுவியிருக்கிறார்களென்று இயம்பினோம். அத்தகைய சங்கத்தின் நோக்கம் ஒற்றுமையை விருத்திசெய்வதேயாம். ஆகவே நமது முன்னேற்றத்திற்குச் சங்கம் அவசியம். அச்சங்கம் மேல் நாட்டுச் சங்கங்களைப்போல ஊன்றி, ஊக்கமாகவும், உற்சாகமாகவும் வேலை செய்யவேண்டும். அச்சங்கமே நமது சங்கங்களுக்கு ஆதர்ஸமாயிருக்கவேண்டும். சங்கங்களின் நன்மைகளை மேல் நாட்டினர் நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றனர் என்று நமது சங்கங்கள் நன்கறியவேண்டும். அவற்றைப்பார்த்து வேலைசெய்ய முன்வர வேண்டும்.

தற்போது நந்தேசத்தி லேற்பட்டுள்ள சங்கங்களனைத்தும் மேல் நாட்டு நாகரீகத்தின் பலனாகவே யுண்டானதெனக் கூறலாம். சங்கம் என்ற அமைப்பு நந்நாட்டிலேற்பட்டிருக்கிறதாயினும் அதன் வேலைகள் மேல் நாட்டுச் சங்கங்களைப் போலிருக்கவில்லை யென்பது இதுகாறும் இயம்பியுள்ளோம். ஆனால், அந்த மேல்

நாட்டினர் சங்கங்களின் பயனை யறிந்து சங்கங்கள் ஏற்படுத்துவதற்கும் நந்தேசந்தான் காரணமென்று செப்பலாம். எப்படி யெனில், சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டில் தோன்றிய புத்ததேவர் தமது மதத்தைப் பரவச்செய்வதற்குச் சங்கங்களையே முக்கிய ஆதாரங்களாக ஆங்காங்கு ஏற்படுத்தினார். அந்நிய னொருவன் பௌத்தனாகவேண்டுமாயின் அவன் பௌத்த சங்கத்தைச் சரணமாக அடைதல் வேண்டும். அதன் பிறகே அவனுக்குப் பௌத்தகுரு உபதேசஞ்செய்து அவனைத் தம் மதத்தில் சேர்த்துக்கொள்வார். அதனாலேயே முதலில் பௌத்தனாகப் போகிறவன் "ஸங்கம் ஸரணம் கச்சாமி" அதாவது "சங்கத்தைச் சரணாகதியாக அடைகின்றேன்" என்று பிரதிக்ஞை செய்ய வேண்டுமென்னும் நியதி அச்சமயத்தில் ஏற்பட்டிருக்கின்றது. பௌத்த மதம் சங்கத்தை முக்கிய கருவியாகக்கொண்டே நாடெங்கும் வியாபித்தது. இக்காலத்தைப்போன்ற இருப்புச் சகடம் முதலிய போக்குவரவு சாதனங்களும், தந்தி முதலிய செய்திச் சாதனங்களும் இல்லாத அந்தப் பண்டைக் காலத்தில் பயங்கரமான வனாந்திரங்கள் நிறைந்திருந்த இந்நாட்டில் இமயம் முதல் குமரி வரையில் அம்மதம் வியாபித்திருந்ததென்றால் அந்தப் பௌத்த சங்கங்கள் செய்த தீவிரமான வேலைகளை என்னவென்றியம்புவது! இந்தப் பௌத்த மதம் இவ்வாறு சங்கங்களால் நாடெங்கும் வேரூன்றியபடியினாலேயே, இதற்குப் பின்னர் ஐரோப்பாவில் தோன்றிய கிறிஸ்து மதமும் இந்தப் பௌத்தமத வேலைகளைப் பின்பற்றி கிறிஸ்து மதத்தைப் பரவச் செய்வதற்குச் சங்கங்களையே நிறுவத்தொடங்கியது. சங்கத்திற்குச் சரணமடையவேண்டுமென்னும் நியமனமில்லாவிடினும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காகச் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டன. காலாந்தரத்திலுங் கூட அக்கிறிஸ்து சமயம் தனக்குள் பல்வேறு பிரிவுகளையுண்டாக்கிக்கொண்டு ஒவ்வொரு பிரிவும் தன் தன் கொள்கையை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சங்கங்களாகவே வேலை செய்கின்றன. மேனாட்டில் முதலில், இவ்வாறு சமயச் சங்கங்களாக இருந்து



பின்னர் நாகரீகத்திற்கேற்ப பல்வேறு துறைகளில் சங்கங்களை ஸ்தாபித்து தற்போதைய உயர்ந்த நிலைமைக்கு வந்து இருக்கின்றன. பின்னும் சற்று ஆராய்வோமானால், அந்தப் பௌத்த சங்கங்களுங்கூட இத்தென்னாட்டில் ஆதியில் தோன்றியிருந்த தமிழ்ச் சங்கத்தை ஆதாரமாகக் கொண்டிருந்ததெனச் சொல்லலாம். பௌத்த சங்கம்—பௌத்த சமயம் தென்னாட்டிற் பரவியிருந்த காலம் கடைச்சங்க காலமாகும். அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கபாட புரத்தில் தமிழ்ச் சங்கம் நிலைபெற்றிருந்தது. இதுவே இடைச் சங்கமாகும். இக்காலத்தில் தான் தசரத புத்திரனாகிய ஸ்ரீராமரது சரித்திரம் நிகழ்ந்திருக்கிறது. இதை வான்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில் சீதையைத் தேடும் பொருட்டுச் சுக்ரீவன் தன் படைகளைத் தென்திசைக்கனுப்பும் போது அனுமான் முதலியோருக்குக் கபாட புரத்தின் தமிழ்ப் புலவர்களின் பெருமைகளை யெடுத்துரைப்பதாலறியலாம். இதற்கு வெகு காலத்திற்கு முன்னரே கடல் கொள்ளப்பட்ட மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கமிருந்ததாகத் தெரிகிறது. அதுவே முதல் தமிழ்ச் சங்கமெனப்படுகிறது. எனவே இவ்வுலகத்தில் எத்தேசமும் ஜனவாசத்திற்கு யோக்கியமாகவோ அல்லது யோக்கியமாயினும் நாகரீகத்தைப் பெறுதற்கியலாத தன்மையாகவோ இருந்த அவ்வளவு புராதன காலத்திலேயே நம் நாடு சங்கத்தின் பயனை யறிந்து வேலை செய்து வந்திருக்கிறது என்பது இதனால் வெளியாகின்றது. இவ்வாறு இவ்வுலத்திற்கே "சங்கம்" என்ற ஒன்றைக் கற்பித்து வேலை செய்து காட்டிய இவ்விந்திய நாடு தற்போது சங்கமென்றால் மேல் நாட்டு நாகரீகத்தின் சாயையென்று சொல்லும்படியான நிலைமைக்கு வந்து விட்டது. காரணமென்ன வெனில், சங்கத்தின் அருமையும் மகிமையும் தெரிந்து வேலை செய்யாததேயாம்.

முதலில் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேருபவர்கள் சுயநலத்தை அப்புறப் படுத்தவேண்டும். சங்கத்தின் முக்கிய நோக்கத்தில் லக்ஷியமுள்ளவராயிருத்தல் வேண்டும். அந்த நோக்கத்தை

நிறைவேற்றுவதில் தன் செல்வத்தையும், உழைப்பையும் செலவழிக்கப் பின்னடையாதவராயிருக்க வேண்டும். தான் செய்யும் சங்கக் காரியத்தில் பிறருடைய நிந்தனைகளும், வந்தனைகளும் வந்தபோதிலும், அவற்றை லக்ஷியம் செய்யலாகாது. இவ்வாறு ஒவ்வொரு அங்கத்தினரும் சங்க நோக்கத்தை நிறை வேற்றுவதையே முக்கிய லக்ஷியமாகக் கொண்டு வேலை செய்வார்களானால், அச்சங்கத்தின் பெருமையும், மகிமையும், விரைவில் நாடெங்கும் பரவுவதுடன் நல்ல கீர்த்தியையும், இலாபத்தையும் அச்சங்கம் அடையுமென்பதிலையமில்லை. இத்தென்னாட்டில் தற்போது ஏல விவசாயிகள் சங்கம் தோன்றியிருப்பது அவ்விவசாயிகளின் நன்மையின் பொருட்டே யென்றியம்பலாம். ஆனால் இச்சங்கத்தில் அங்கத்தினராயுள்ளவர்களில் சிலர் சங்கவரம்பை மீறி நடந்துகொண்டதாக, அதன் அறிக்கையினால் தெரியவருகிறது. இவ்வாறு செய்வது சங்கத்தின் பெருமையும், அதன் நிர்வாகமும் அறிந்து கொள்ளாமையையே காட்டுகின்றது. சங்கத்தைச் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒப்பிடலாம். மனிதன் தலை, கை, கால், வயிறு முதலிய உறுப்புக்களைக் கொண்டவனாயிருக்கிறான். இவ்வுறுப்புகளெல்லாம் சேர்ந்தே மனிதனெனப்படுகிறான். அம்மனிதன் ஒரு காரியத்தைச் செய்துமுடிக்கவேண்டுமாயின் அவனது உறுப்புகளெல்லாம் ஊனமின்றி அவனிஷ்டப்படி வேலை செய்யத் தயாராயிருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடின் வேலை சரிவர நடைபெறாது. அது நடைபெறாவிடின் ஊதியம் பெறமுடியாது. அது இன்றேல் இன்பமில்லை. இன்பமில்லாதபோது மனிதனுக்கு ஓய்வில்லை. ஓய்வின்றேல் ஒருறுப்பேனும் சும்மாயிருக்கச் சாத்தியமில்லை. அப்படியிருப்பினும் பலமில்லை. வயிற்றோடு பகைத்து வலிமை குன்றிய அங்கங்களின் கதை போலாய்விடும். அதுபோலவே ஒருசங்கத்திற்கும் தலை, கை, வயிறு கால், விரல்கள் முதலிய உறுப்புகளுண்டு. அவை முறையே பிரஸிடெண்டு, காரியதரிசி, பொக்கிஷதார், மெம்பர்கள் முதலியவர்களாம். இந்த அமைப்பை யுன்னிச் சங்கத்தின் ஐக்யத்தை யுணரலாம். சங்கத்தின் நோக்கமே சங்கமென்னும் கெம்பீர புருஷனின்



புத்தியாம். புத்தியில்லாமல் எப்படி ஒரு சாதாரண மனிதன் ஒரு காரியத்தைச் செய்துப் பயனடைய முடியாதோ, அப்படியே சங்கமும் ஒரு நோக்கமின்றிக்காரியமின்றிப் பயனடையமுடியாது. ஆகவே சங்கத்தின் நோக்கம் நிறைவேறுவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் அத்தியாவசியமானது. அங்கத்தினருக்குள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு மனக் கசப்புடையவர்களாயிருந்த போதிலும் சங்கக்காரியங்களில் அவற்றைப் புகவிட்டுக் கொள்ளலாகாது. சங்கம் என்பதை ஒரு பெரிய தெய்வம் அல்லது மகரிஷி அல்லது தீர்க்கதரிசி யென்று ஒவ்வொருவரும் கொள்ளவேண்டும். அதில் அங்கத்தினராயுள்ளவர்க ளொவ்வொருவரும் தாம் தாம் அத்தெய்வம், அல்லது அந்த மகரிஷி அல்லது அந்த தீர்க்கதரிசியின் கை கால் முதலிய ஒவ்வொருறுப் பென்று எண்ணமுடையவராயிருக்கவேண்டும். இந்த எண்ணத்துடன் வேலை செய்தால் சங்கத்தின் பெருமைத் தனக்கே யன்றிப் பிறர்க்கும் நன்கு விளங்கும். பயனும் அதிகமாகும். புகழும் உண்டாகும். திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் இவ்வித பெருந்தன்மையுடனும் ஒற்றுமையுடனும் உழைத்து நாட்டிற்கு வழிகாட்டியாக விளங்கும்படி எல்லாம் வல்ல எம்மிறைவன் அருள் புரிவாராக.

A. ராமஸ்வாமி.

# ஏலச்செடியின் ஜாதகம்.

நான் ஒரு சோதிடனல்ல. ஒரு தீர்க்கதரிசியுமல்ல அல்லது தாவர சாஸ்திரத்திலிருந்து பெருகி வளர்ந்த விவசாயத்துறையில் தேர்ச்சி பெற்ற ஒரு மேதாவியுமல்ல. பின்னர் ஏன் இத்தலைப்புக்கொண்ட விஷயத்தை எழுதத் துணிந்தீர்? என்று நீங்கள் என்னை வினவலாம். சகோதரர்களே, என்னுடைய புதிய சிறிய அநுபவத்தில், ஏலமலைப் பிராந்தியத்தில், கிட்டத்தட்ட பதினைந்தாண்டு ஏறயிறங்கத் திரிந்த பழக்கத்தில், ஏறக்குறைய 400 ஏகராவிற்குக் குறைவில்லாத விஸ்தீரணமுள்ளதும் புதிய பழைய திருத்த முறைகளைக் கையாண்டு நேரில் வேலை செய்து பார்த்த பொன்முடித் தோட்டம் தற்போது இருக்கிற ஸ்தானத்தில், என்னில் வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்து ஒரு தேர்ச்சிபெற்ற சிலருடைய பொறுப்பின் கீழிருந்து வரும் தோட்டங்கள் காணப்படுகிற காட்சியில் ஒரு மனிதனுக்கேற்பட்ட சாதாரண அறிவைக் கொண்டே இதைத் தர்க்கிக்க முன் வந்திருக்கிறேன். அதாவது ஏலச்செடி—கம்பம் பள்ளத்தாக்கை யொட்டிய மலைப் பிராந்தியத்தை பிரக்கியாதிக்குக் கொணர்ந்த ஏலச்செடி 20, 25, ஆண்டிற்குள் இருக்குமிடந் தெரியாதபடி ஏலவிவசாயிகளின் சாலத்தினால், அசாக்கிரதையினால் மாய்ந்தழிந்து போகுமென்று யூகிக்கிறேன். தங்களில் பலரும் அநுபவித்த இதை வெளியே யெடுத்துச் சொல்லத் தயாரிலிருக்கலாம். ஆயினும் யாது காரணம் பற்றியோ தங்கள் சுயத்திற்கே, சுயமதிப்பிற்கே, ஏலச்செடியின் 'ஆதாரத்திற்கே இடைஞ்சலேற்படும் வண்ணமாய் உள்ளதை வெளியிட்டுச் சொல்லத் தயங்கி நிற்கிறீர்கள். உங்கள் மனச்சாட்சியை விசாரித்துப் பாருங்கள். வெளியே வாருங்கள். வெளியே வந்து தர்க்கியுங்கள். ஒரு சிலர் கேவலமடைந்தாயினும், தோல்வியுற்றாயினும் உண்மையை யாராய்ச்சி செய்து உள்ளதை நிலை நிறுத்தப்பாடு படுவோம். தயாராகுங்கள். நான் சொல்வதை—அடியேன் எழுதத் துணிந்ததைக் கண்டித்து, நியாயமான மறுப்புரை கொடுத்து உண்மையை வெளிப்படுத்தும் ஆராய்ச்சிக்காரர்களுக்கு நான் என்னிருதயத்தில் மேலான, கௌரவஸ்தானத்தைக்கொடுத்து அன்பாகிய மலரால் அவருக்கு மாலை புனைந்து போற்றி நிற்கத் தயாரிலிருக்கிறேன்.



ஏல விவசாயிகளே, வீட்டை விட்டு வெளியே புறப்படுங்கள்! உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள்! நீங்கள் எப்பொழுது பயிர் போட்டீர்கள்? எவ்வளவு கவனமாக நாற்றைப் பொறுக்கி யெடுத்து நட்டீர்கள்? போன வருடம் தெரிந்தெடுத்துப் போட்ட நாற்றை இவ்வாண்டில் இப்பொழுது போய்ப் பார்த்தீர்களா? எவ்வளவு செடிகள் நல்ல நிலைமையிலிருக்கின்றன? கவனித்தீர்களா? போன ஆண்டுக்கு முதலாண்டு போட்ட நாற்றுகளில் எத்தனை ஏக்கரா விஸ்தீரணமுள்ளவைகளில் வியாதி பரவி நிற்கிறது? இன்னும் எத்தனை ஆண்டு வரைக்கும் அவை நிலைத்து நின்று, பயனளிக்குமென்று கருதி யிருக்கிறீர்கள்? சுதேசியில் கண்ணுங் கருத்துமாயிருந்து உழைத்து வந்த அந்த ஒரு கருத்தான தோட்டத்தில், பணத்தைப் பொருளாக நினையாது ஏலச்செடியினாதாரத்திற்கே செலவழித்து வருகிற லட்சுமி விலாசத் தோட்டத்தில், சிக்கனம் விவசாயத்திற்கே லட்சணம் என்ற கொள்கையை யநுசரித்துப் பொறுமையோடு நாளடைவாய் வேலை பார்த்து வருகிற நடராஜ விலாசத்தோட்டத்தில், கன்னியாகப் பதினைந்து ஆண்டு இன்னும் கழியாத பொன்முடித் தோட்டத்தில் இரண்டாண்டுகளுக்கு முன் புதிதாய், நயமாய், விசேஷமாய்த் தெரிந்தெடுத்துப் பலவிதங்களிலும் ஆழ அகல சாதாரணமான குழிகளில் வைகாசி, ஆனி மாதங்களில் நிறுத்தியும் படுக்கப் போட்டும் சுபாத் செய்தும் செய்யாமலும் ஒழுங்கான முறைகளில் வேலை செய்து, கிருஷி செய்த பயிர்களின் நிலைமை இப்பொழுது எவ்வண்ணமாயிருக்கிறதென்று சென்று பாருங்கள். நான் பார்த்தவளவில் சொல்லத் தயங்கவில்லை. பயிர்கள் முன்னிருந்தவைகளைக் காட்டிலும் பலவீனமாய், செழுமைக் குறிகுறியான கருமை நிறம் மாறினவைகளாய் வியாதிக்கு உடன் இடந்தருவனவாய் சுருங்கச் சொல்லில், சீக்கிரம் நசித்துப் போகக் கூடியவைகளாய்க் காணப்படுகின்றன. அந்தோ! இன்னும் இரண்டு மூன்றாண்டுகளுக்குள் மறுபடியும் புதுப்பித்துத் தான் தீரவேண்டும். புதுப்பித்தும் விடலாம். ஆனால் வித்திற்கு எங்கே போகிறது? இந்தப் பலவீனமான செடியிலிருந்தோ பிரித்துப் பின்னும் போடுகிறது! பின்னும் அப்பிரித்தவைகள் முன்னிலும் தன் காலஞ் சுருங்கச் சுருங்கக் கெட்டழிந்து ஒரு வேளை ஒரு வருடத்திற்குக் கூடத்தாங்க முடியாத நிலைமைக்கு வந்து விடும் போலிருக்கிறது என்ற ஏக்கம் ஒவ்வொரு தோட்டக்காரரையும் பிடித்துலைத்தாட்டிக் கொண்டு நிற்கிறது. செடிகள் வியாதியினால் பீடிக்கப் பீடிக்க, பலன் குறையும். ஒரே தோட்டத்திலுள்ள அதே நாற்றை மீண்டும் மீண்டும் பிரித்துப் பிரித்துப் போட்டு வரும் வரை ஏலச்செடியின் ஆயுள் 'பக்கப்பட்டுக்கொண்டே போகிறது. அன்றன்று வயிற்றுப்பாட்டைக் கழிக்கப்பாடுபடும் கூலிக்காரனை யநுசரித்து ஏலத் தோட்ட வேலை

கள் நடத்தப்படுகின்றன. தட்டையிலிருந்தும், கிழங்கிலிருந்தும் பிரித்து வேறு படுத்திவைக்கும் பயிர்கள் சமய சாந்தியை யளிக்குமே யன்றி, அவை நீடித்து நிற்கா. ஒரே தோட்டத்தில் ஒரே யிடத்திலுள்ள நாற்றை அப்படி யப்படியே அங்கங்கே நட்டு வரும் வரைக்கும் ஒரு வித மாறுதலுமே ஏற்படாது. தோட்டக்காரர்களே, ஏற்கனவே மழை நாளுக்கு நாள் க்ஷீணித்து இயற்கை நம்மிடம் ஒத்துழைக்க மறுக்கு மிக்காலத்தில், ஒரு புறம் மழையையே ருசித்தறியாத பாலைவனத்திலும் மழையைச் செயற்கையாய்ச் செய்து கண்டுபிடிக்கு மிக்காலத்தில், பயிர்களுக்குப் பொருந்தாத சீதோஷ்ணஸ்திதி யிருக்கு மிடங்களில் 'கண்ணாடி வீடுகளில் தேவையான வெயிலையும் சீதளத்தையும் உஷ்ணத்தையும் பிரயோகித்து எப்பொழுதும் முளையாத தாவரங்களை விருத்தி செய்ய முயற்சித்து வருமிக்காலத்தில், தேயிலைச் செடிகளில் அடிக்கடி தோன்றும் வியாதிகளை மாந்திரீகம் போன்று உடனுக்குடன் தீர்த்துக் கொண்டு வருகிற இச்சமயத்தில், நீங்கள் இப்பொழுது என்ன செய்யலாமென்று யோசித்திருக்கிறீர்கள்? இந்த பத்தொன்பதாம் நூற்றாண்டிலே உறுதியற்ற இந்திய சுபாலம் உங்களை விட்டு நீங்கினபாடில்லையோ? களைந்தெறிய வேண்டியவைகளைத் தாமதமில்லாமல் களைந்தெறியுங்கள். கிழிந்த தூசு படிந்த கந்தையை அப்பால் கழற்றித் தூர யெறியுங்கள். புதிய உடையை மாற்றிக்கொள்ளுங்கள். க்ஷேமிக்க வேண்டியவைகளைப் பத்திரமாய்க் காப்பாற்றி வையுங்கள். சகோதரர்களே, ஒன்று கூடுங்கள், யோசியுங்கள், முடிவு கட்டுங்கள்.

தேர்ந்து பொறுக்கி யெடுத்த நயமான விதைகளிலிருந்து ஏலச்செடியை வளர்ப்பிப்போம்; வாருங்கள் ஒற்றை நாற்று நடுவது சிலாக்கியமா, இரண்டு மூன்று ஒன்று சேர்ந்து நடுவது சிலாக்கியமா? என்பதை உங்களுடைய தோட்டத்திலேயே அடிக்கடி நடமாடித்திரிகிற இடங்களில் கொஞ்சம் வைத்துப் பரீட்சித்துப் பாருங்கள். கூடுமான மட்டிலும் இன்னொரு தூர இடத்திலிருந்தே விதைகளைக் கவனமாயெடுத்துக் கைப்பற்றப் பாருங்கள். அகத்தியம் ஆழ அகலக்குழிகளில் நாற்றை நடவற்புறுத்துங்கள். 8, 9 அடி இடை விட்டு ஒவ்வொரு பயிரையும் நடுங்கள்; செடிகளுக்குச் செடிகள் நிழலைத்தந்து விரிய வியலாது இருட்டுக்குள் கிடந்து நெருங்கும்படி செய்யாதீர்கள். சகோதரர்களே, நான் 9 அடி இடம் விட்டு, ஒழுங்காக நிறுத்தப்பட்ட வேலையைச் செய்து பார்த்திருக்கிறேன். 5, 6 அடிகளுக்கு ஒன்றாய் நட்டு 'தாளடர்ந்தது வேளாண்மை" என்றதை சரியாய் அர்த்தம் பண்ணிக்கொள்ள மாட்டாமல் சாதாரண முறையில் சிறு குழிகள் போட்டும் பார்த்தேன். மற்றத்தோட்டங்களிலும் பார்த்து வந்திருக்கிறேன். இப்பொழுது இவ்விரண்டிலும் நேரில் பிரத்யக்ஷத்தில் கண்டறிந்தவைகளைச் சொல்ல முன் வந்தேனேயன்றி



இக்கரைக்கு அக்கரை பச்சை யென்று சொல்ல வரவில்லை. ஆழக் குழிகளினால் வியாதி யுண்டாகிறதென்ற வீணான வாதத்தைத் தள்ளி யெறியுங்கள். நேர் கோணமல் 8, 9 அடிகளுக்கு இடையில் 2 அடி ஆழம் அகலத்திற்குக் குறையாதபடி தகுந்த குழிகளில் கூடுமானமட்டிலும் உடனுணவுக்கு லாயக்காயிருக்கிற மேல் மண்ணுடன் சிறிது சாம்பல், சுண்ணாம்பு, பொடிபண்ணிய சருகு அல்லது மரத்தூள்களிலொன்றை உடன் கலந்து போட்டுப்பின் இலேசாக அடி மண்ணை அதின் மேல் பரப்பிச் செடியை குழியிலிட்டுப் பாருங்கள். சாம்பல், சுண்ணாம்பு இவைகளுக்குக் கொழுத்த பூமிசாரத்தை இளக்கித்தருகிற குணத்துடன் மண்ணிலிருந்துண்டாகிற வியாதிக்கிருமியையும் அழிக்கும் குணம் மிகுதியும் பொருந்தியிருக்கிறது. நாம் நெடுநாளாகக் கையாண்டு வருகிற பூமியின் உரம் செடிகளாலும், மீறவிடுகிற களைகளாலும், ஊடு நிற்கிற ஏராளமான பெரிய மரங்களாலும் எவ்வளவு தூரம் செலவழித்திருக்கக்கூடுமென்று நிதானித்துப் பூமியின் மேல் மண்ணைக் கீழே தள்ளி அடி மண்ணை மேலே அடிக்கடி புறட்டிக் கொடுக்கப் பின் வாங்காதீர்கள். பலனெடுப்புக் காலங்களில் மூட்டினூடு அருகாமையில் ஏற்கெனவே இயற்கையால் தானாக விழுந்து கிடக்கும் இலை யேறப்பெற்ற சருகுத்தூள்களை அப்புறம் தள்ளி யெறியாதபடி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். மைசூர்ச் செடி இந்த விஷயத்தில் கொடுத்து வைத்ததுதான். சாம் நேரே மேலே போவதினால் அவைகளுக்குத்தானாய்க் கிடைத்த உணவைச் சொந்தக்காரனென்பவன் தள்ளியெறியாதபடி இயற்கையைக் காத்து நிற்கிறது. மைசூர்ச்செடி கூடுதல் பலன் பிடிப்பதிற்கு இதுவும் ஒரு காரணமாகும். சங்கத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள் கிடக்கிற எந்தத் தோட்டமும் 2, 3 களையெடுப்புக்குமேல் களை யெடுக்கிறதில்லை. ஆயினும் ஏராளமான பணத்தைக் காலந்தவறி அநாவசியமாய்ச் செலவழித்து வருகிறார்கள். ஏல விவசாயிகள் தங்களுடைய அஜாக்ரதையைத் துடைத்துவிட்டுத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே சீக்கிரமாய்ச் செய்ய முன்வருவார்களாகில், ஏலச்செடியை முன்னிலும் பல முன்றாய்க் கூடுதல் பலன் பிடிக்கக்கூடியதாய்ச் செய்து கொள்ள இன்னும் காலம் இல்லாமற் போகவில்லையென்று சொல்லி இதை முடித்துக்கொள்கிறேன்.

S. வடிவேல்,
குப்பிரண்டு,
பொன்முடி எஸ்டேட்.

# இலங்கையில் ஏலக்கிருஷி.

விவசாய இலாகா,
பெராடினியா, இலங்கை.
9-ந் தேதி ஆகஸ்டு 1927.

ஸ்ரீமான் நாராயணஸ்வாமி அவர்கள்,
ஆசிரியர், "ஏல விவசாயி
உத்தமபாளையம்.

ஐயா,

1927-ஞு ஜூலை 25உ எழுதிய தங்களுடைய கடிதம் கிடைத்தது. இந்தத் தீவில் 7,000 ஏக்கர் நிலத்தில் ஏல விவசாயம் செய்யப்படுகிறது. சமுத்திர மட்டத்திற்கு 2,800 அடிக்கு மேற்பட்டு 4,000 அடிக்கு அடியிலிருக்கும் நல்ல மழையோடு கூடிய மலைப் பிராந்தியங்களில் முக்கியமாகப் பயிர் செய்யப்படுகிறது. பரீட்சார்த்தமான அளவில் ஏலக்கிருஷியை இந்த இலாகா நடத்திப் பார்க்கவில்லை. பெரிய தோட்டக்காரர்களாலும், சிறிய தோட்டக்காரர்களாலும் இவ்விவசாயம் நடைபெறுகிறது. இலங்கையில் இருவகை ஏலச்செடிகள் இருக்கின்றன. (1) மலையாளம் (Malabar) ஜாதிச்செடியின் இலைகளுக்கு அடியிலிருக்கும் தண்டு மெதுவாயிருக்கின்றது. பூ வெடுத்துக் காய்க்கும் சரங்கள் பூமியின் மேல் பாகத்தை நோக்கி வெளி



யே கிளம்புகின்றன. (2) மைசூர் வர்க்கச் செடிக்குச் சற்று மெதுவான, வழு வழுப்பான இலைகள் உண்டு. அதன் பூ விட்டுப் பலன் கொடுக்கும் சரங்கள் அடியிலிருந்து நேராக மேல் முகமாகப் புறப்படுகின்றன. இவ்வகை செழிப்பபாய் உண்டாவதாலும், சரங்கள் மேல் நோக்கிச் செல்வதாலும் மைசூர் ஜாதியே பொதுவாக அதிகமாகத் 'தெரிந்தெடுக்கப்படுகிறது.

பிள்ளைகளாலும, பெண்களாலும் பழங்கள் பொறுக்கப்படுகின்றன. அவைகள் (1) வெள்ளையாகவோ அல்லது (2) பச்சையாகவோ பாடம் செய்யப்படுகின்றன. முதலாவது விதம் செய்வதில் பழங்கள் கழுவப்பட்டு, ஊரப்பட்டு, பின்பு கெந்தகப் புகையில் உலர்த்தப்படுகின்றன. வெள்ளை நிறம் வரும் வரையில் திருப்பித் திருப்பி இவ்வேலை செய்யப்படுகிறது. உலர்ந்த பின்பு வெட்டுக்கத்தியினால் அல்லது இயந்திரத்தின் உதவியினால் அதனுடைய வால்கள் வெட்டப்படுகின்றன. பின்னால் சொன்ன பச்சைப் பாடத்திற்காகப் பழங்கள் வெயிலில் சாதாரணமாக உலர்த்தப்படுகின்றன.

தங்கள் கீழ்படிதலுள்ள ஊழியன்,
F. A. ஸ்டாக்டேல், (M. A., F. L. S.)
டைரெக்டர்.

# ஓர் நல்லுரை.

கைத்தொழில் டைரெக்டர் காரியாலயம்,
திருவனந்தபுரம்,
தென்னிந்தியா.
1....9....27.

From
I. C. சாக்கோ, Esq., B. Sc., (Lond) B. A., A. R. C. Sc
A. R. S. M.,
கைத்தொழில் டைரெக்டர்,
திருவாங்கூர்.

To
ரா. நா.,
ஆசிரியர், "ஏல விவசாயி",
உத்தமபாளையம்.

பிரிய ஐயா,

தங்களின் 3—8—27உக் கடிதத்துடன் "ஏல விவசாயி"ப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்களும் வந்தன. அவைகளுக்காக அநேக வந்தனங்கள். ஏல விவசாயிகளின் நிர்மாணமும் ஊக்கமும் புகழத்தக்கது. பத்திரிகைக்கு எல்லா வழிகளிலும் ஜெயம் உண்டாவதாக.

தங்கள் உண்மையுள்ள,
I. C. சாக்கோ.



ஓர் சிறு பிரசங்கச் சுருக்கம்.

## மைசூர் சமஸ்தானத்து கைத்தொழில் இலாகா டைரெக்டர்.

## 9–10–1927.

பிரியமுள்ள ஏல விவசாயக் கனவான்களே!

தாங்கள் அனுப்பிய அன்பான அழைப்பிற்காக அநேக வந்தனங்கள் அளிக்கிறேன். உங்களுடன் இன்று கலந்துகொள்வதில் அளவற்ற ஆனந்தம் அடைகிறேன். எங்களுடைய வருகையினால் உங்களுக்கும் எங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டாகியிருக்கிறது. எங்களுடைய சமஸ்தானத்தில் இவ்வளவு ஏல மகசூலை உண்டாக்கும் இத்தனை ஏலத் தோட்டக்காரர்கள் கிடையாது. உங்கள் சங்கத்தின் ஆதரவில் பத்திரிகையொன்று பதிக்கப்படுவதாக அறிந்து சந்தோஷம் கொள்ளுகிறேன். உங்களுடைய பெரிய ஸ்தாபனம் போன்று எங்கள் ஏலக் கிருஷிகர்களுக்குச் சங்கமே கிடையாது. எங்களுடைய மகசூல் பம்பாய் ராஜதானியில் அதிகமாக விற்கப்படுகிறது. எங்கள் ஏல விவசாயிகளுக்குத் திருவாங்கூர் ஏல விவசாயிகளாகிய நீங்களே வழிகாட்டியாயிருக்கின்றீர்கள். உங்கள் விற்பனைக் கமிட்டி அறிக்கையின் மூலம் உங்கள் ஏலக்காய் விற்பனை விஷயத்தில் நீங்கள் செய்திருக்கும் அபார வேலையை அறிந்து, ஆச்சர்யமும் ஆனந்தமும் அடைவதுந்தவிர, உங்களின் அரிய, பெரிய வேலையைப் போற்றுகிறேன்.

எங்களால் கூடிய உதவி உங்களுக்குச் செய்யத் தயாராயிருக்கிறோம். ஏலக்காயிலிருந்து கிராவகம் எடுப்பதைக் கற்றுக்கொ

159609



ண்டு வருமாறு உங்களில் கற்றுத்தேர்ந்த வாலிபர்களில் ஒருவரைத் தெரிந்தெடுத்து அயல் நாட்டுக்கு அனுப்புங்கள். இவ்விஷயமாக இந்தியா ஆபீஸுக்கு எழுதி வேண்டிய நடபடிக்கைகளை உங்களுக்கு நான் செய்கிறேன்.

உங்கள் சங்கத்தின் நடபடிக்கைகளையும், தீர்மானங்களின் பேரில் வரும் வாதங்களையும் நன்கு கவனித்தேன். எதையும் தீர்க்கமாய்த் தர்க்கித்து ஒரு முடிவுக்கு வருகிறீர்கள். உங்கள் நடை முறைகள் நன்றாயிருக்கின்றன.

ஐக்கிய நாணய சங்கத்தொடர்பில் விற்பனை யூனியன் ஏற்படுத்தி ஏலக்காயை விற்கவேண்டுமெனச் சென்ற தினம் வாதம் செய்தீர்கள். ஐக்கிய நாணயச் சங்கம் ஆதியில் ஏழைகளுக்காகவே ஏற்பட்டது. அதுவும் அவர்களுக்குக் கொஞ்ச அளவில் விற்பனை விஷயத்தில் உதவி செய்யுமேயன்றி இம்மாதிரி பெரிய விற்பனை விஷயத்தில் அது அதிகமாக ஒன்றும் செய்ய இயலாது. அப்படி நடத்த அதன் சட்ட திட்டங்களும் இடங்கொடுக்காது. உலகத்தில் மனிதர்களில் 10ல் ஒருவருக்கோ 100ல் ஒருவருக்கோ வியாபார அறிவு அமைந்திருக்கிறது. ஏலக்காய் விலையேறப்பட்ட பொருள். அயல் நாடுகளில் தான் இது அதிகமாக அழிக்கப்படுகின்றது. ஏலக்காய் விற்பனை விஷயத்தில் நல்ல வியாபாரப் பயிற்சி (International Commercial Intelligence) உள்ளவர்களின் ஒற்றுமைப்பு அவசியம் தேவை. ஏலக்காய் விற்பனையை ஐக்கிய சங்கத்தின் அடியில் அமைப்பது அவ்வளவு உசிதமன்று.

உங்களுடைய கிருஷியை நான் நேரில் வந்து பார்த்து அறிந்து கொள்ளவேண்டியதாயிருக்கிறது. நான், நீங்கள் ஏலக்காய்களை எடுத்துப்பாடம் செய்து மகசூல் தயாரிக்கும் விதத்தை நேரில் காண சமயம்போல் உங்கள் தோட்டங்களுக்கு வரக்கூடும் சந்தர்ப்பம் வரட்டும்.

---


திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு ஏற்றதுணைவன் எவன்?

ஏல விவசாயிகளுடைய நலம் நாடிச் சலியாது உழைப்பவன் எவன்?

ஏல விவசாயிகளின் நிலைமையை உள்ளபடி உரைப்பவன் எவன்?

# அவனே "ஏல விவசாயி"

ஆகையால் அவனை ஆதரியுங்கள்.

---

குறைந்த விகிதம்! நிறைந்த இலாபம்!!

நல்ல இடம்! நாணயமான கனவான்கள்!!

உங்களுக்கு

அதிக இலாபம் அடைய ஆசையா?

உங்கள்

வியாபாரத்தை விருத்தியாக்க விருப்பமா?

உங்கள் பெயரும் பொருளும் ஏல விவசாயிகள்

வீடுகளிலெல்லாம் உலாவ இஷ்டமா?

பின் ஏன் தாமதிக்கிறீர்கள்?

உடனே "ஏல விவசாயி" யில்

விளம்பரம் செய்யுங்கள்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, ,, | ,, | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு ,, ,, | ,, | 3—0—0 |

எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"ஏலவிவசாயி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 NOV 1927
MADRAS

[illegible]—கம்பெனி" "Company"

# T. C. P. A.

# ஏலச் சரக்கு விற்பனைக்

## கம்பெனி, கோம்பை.

பிரஸ்தாபக் கம்பெனியானது ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், முன்னேற்றத்தையும், வியாபாரிகளின் சௌகரியத்தையும் உத்தேசித்து கோம்பை, தேவாரம் கிராம ஏல விவசாயிகளின் அரிய பெரிய முயற்சியினால் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது.

நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச்சரக்குகளை வாங்கி விற்க ஆசைகொள்ளும் வியாபாரிகளும் கீழே குறிப்பிட்டிருக்கிற எங்கள் விலாசத்திற்கு எழுதித் தேவையானவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை பரீக்ஷித்துப்பார்த்தால் கம்பெனியின் ஒழுக்கமும், சரக்கின் நயமும், சகாயமும் தெரியவரும். ஆகையால் எல்லா ஏல விவசாயிகளும், ஏலக்காய் வியாபாரிகளும் கம்பெனியை ஆதரித்து இலாபத்தையும், புகழையுமடைவீர்களாக.

விலாசம்:—
காரியதரிசி,
**T. C. P. A.** ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
கோம்பை, மதுரை ஜில்லா.

Edited and published by R. Narayanaswami on behalf of The Travancore Cardamom Planters' Association.
Printed at ANANDA PRESS, Uthamapalayam.